


# பேரின்பம்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

உ
சிவமயம்

# சமர்ப்பணம்

எங்கள் குடும்பத்தின் ஒளிவிளக்காய்த்
திகழ்ந்து அன்போடும் பண்போடும்
அரவணைத்து எம்மை நல்வழி நடத்தி
இன்று வானுறையும் தெய்வமாகிவிட்ட
எங்கள் அன்புத் தெய்வத்தின்
பாதார விந்தத்தில்
கரம் கூப்பி சிரம் தாழ்த்தி
இம்மலரினைச் சமர்ப்பணம் செய்கின்றோம்.

ஓம் சாந்தி!

**- குடும்பத்தினர் -**



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org



# பஞ்சபுராணம்

## • தேவாரம்

பரிந்துநன் மனத்தால் வழிபடும் மாணி
தன்னுயிர் மேல்வருங் கூற்றைத்
திரிந்திடா வண்ணம் உதைத்தவற் கருளுஞ்
செம்மையார் நம்மையா ளுடையார்
விரிந்துயர் மௌவல் மாதவி புன்னை
வேங்கைவண் செருந்திசெண் பகத்தின்
குருந்தொடு முல்லை கொடிவிடும் பொழில்சூழ்
கோணமா மலையமர்ந் தாரே.

## • திருவாசகம்

கமலநான் முகனும் கார்முகில் நிறத்துக்
கண்ணனும் நண்ணுதற் கரிய
விமலனே எமக்கு வெளிப்படா யென்ன
வியன்தழல் வெளிப்பட்ட எந்தாய்
திமிலநான் மறைசேர் திருப்பெருந் துறையில்
செழுமலர்க் குருந்தமே வியசீர்
அமலனே அடியேன் ஆதரித் தழைத்தால்
அதெந்துவே என்றரு ளாயே.

## • திருவிசைப்பா

தனதன்நல் தோழா சங்கரா ! சூல
பாணியே! தாணுவே சிவனே
கனகநல் தூணே! கற்பகக் கொழுந்தே
கண்கள்மூன் றுடையதோர் கரும்பே !
அனகனே குமர விநாயக சனக
அம்பலத்து அமரசே கரனே !
நுனகழல் இணையென் நெஞ்சினுள் இனிதாத்
தொண்டனேன் நுகருமா நுகரே.

## • திருப்பல்லாண்டு

ஆரார் வந்தார் அமரர் குழாத்தில்
அணியுடை ஆதிரைநாள்
நாரா யணனொடு நான்முகன் அங்கி
இரவியும் இந்திரனும்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

தேரார் வீதியில் தேவர் குழாங்கள்
திசையனைத்தும் நிறைந்து
பாரார் தொல்புகழ் பாடியும் ஆடியும்
பல்லாண்டு கூறுதுமே.

## பெரியபுராணம்

அந்நகரில் அமர்ந்து அங்கண் இனிது மேவி
ஆழிபுடை சூழ்ந்து ஒலிக்கும் ஈழம் தன்னில்
மன்னு திருக்கோண மலை மகிழ்ந்த செம் கண் மழ
விடையார் தமைப் போற்றி வணங்கிப்பாடி
சென்னி மதி புனை மாடம் மா தோட்டத்தில் திருக்
கேதீச் சரத்து அண்ணல் செய்ய பாதம்
உன்னி மிகப் பணிந்து ஏத்தி அன்பரோடும் உலவாத
கிழி பெற்றார் உவகை உற்றார்.

## திருப்புகழ்

பக்தியால் யானுனைப் பலகாலும்
பற்றியே மாதிருப் புகழ்பாடி
முத்தனா மாறெனைப் பெருவாழ்வின்
முத்தியே சேர்வதற் கருள்வாயே
உத்தமா தானசற் குணர்நேயா
ஒப்பிலா மாமணிக் கிரிவாசா
வித்தகா ஞானசத் தினிபாதா
வெற்றிவே லாயுதப் பெருமாளே.

## பூவற்கரைப் பிள்ளையார் துதி

திங்கள் சூடும் அரனருள் மைந்தனே
தேவர் போற்றும் திருமால் மருகனே
துங்க வெங்கரி போலும் முகத்தனே
தொல்லையின்றி வருந்துய ராற்றுவாய்
சங்கு தாரகை கின்னர வீணைகள்
தம்பு நாத சுரங்க லொலிக்கவே
பொங்கு பூவற்கரை தனில் வாழ்கின்ற
புதுமையுள்ள விநாயக மூர்த்தியே.

**சோதிடர் க.வே.ஆழ்வார் அவர்கள்**

இந்தப்பாடலானது 19ஆம் நூற்றாண்டின் நடுப்பகுதியில் எமது ஆலயம் அண்ணமாராக இருந்தகாலத்தில் அமரர் பேரின்பநாயகத்தின் பீட்டனார் அமரர் திரு.ஆழ்வார் அவர்களினால் பாடப்பெற்றது.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

அமரர்

## செல்வத்துரை பேரின்பநாயகம் அவர்களின்

# வாழ்க்கைக் குறிப்பு

ஒருவருடைய வாழ்வியல் சார்ந்த விழுமியங்களை அவரைப்பற்றி அறிய அவருடைய நேரடியான நடை, உடை, பழக்கவழக்கங்களை தரிசிப்பது மட்டுமன்றி அவர் சார்ந்த குடும்பத் தலைமுறைவாரியாகவும் அறிந்துகொள்வது அவருடைய சிறப்புக்களுக்கு அல்லது அவர் சார்ந்த குடும்பப் பின்னணியுடன் கணிப்பது மேலும் அவருடைய பெருமைக்கு அணிசேர்ப்பதாக அமையும். அந்தவகையில் அமரர் திரு. செல்வத்துரை பேரின்பநாயகம் அவர்களின் வாழ்க்கையினையும் அவ்வாறு இணைத்துப் பார்ப்பதன்மூலம் அவருடைய வாழ்வின் சிறப்பம்சங்களையும் அறிந்துகொள்ளலாம்.

### பிறப்பும் கல்வியும்

ஈழவழநாட்டின் தலையாகத் திகழ்வது வடமராட்சி. வடமராட்சியில் நீண்ட பாரம்பரியத்தையும் நயத்தக்க நாகரீகத்தையும் கொண்ட வதிரி. இக்கிராமத்தின் சந்திவளவுக் குடும்பத்தின் மிகவும் பிரபலமான சமூக சேவையாளரும் ஆசிரியருமான அமரர் ஆ. ம. செல்வத்துரை, ஆசிரியர், திருவெண்பாதி குடும்பத்தில் வாழ்ந்த ஆறுமுகம் மகள் மீனாட்சியம்மா ஆசிரியை தம்பதிக்கு 1937 ஆம் ஆண்டு பங்குனி மாதம் 28 ஆம் திகதி பேரின்பநாயகம் அவர்கள் பிறந்தார். இவருடைய இளைய சகோதரர்கள் திரு. செ.சபாநாயகம் (சமாதான நீதவான்), திரு.செ.இராசநாயகம் இருவருமாவர்.

இவரது தந்தையாரான அமரர் ஆ.ம.செல்வத்துரை அவர்கள், தான் சமூக சேவையில் ஈடுபட்டிருந்த பொழுது பல பிரமுகர்களை எல்லாம் சந்திக்கவேண்டி இருந்தது. அச்சமயம் அவருக்கு ஆங்கில அறிவு இல்லாமல் இருந்ததை அவர் மிகவும் ஒரு குறையாகவே கருதியிருந்தார். தனக்கு ஏற்பட்ட குறை தன் மகனுக்கும் ஏற்படக்கூடாதென்ற நோக்கத்தில்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

பேரின்பநாயகம் அவர்கள் ஆங்கில மொழியில் பாண்டித்தியம் பெறவேண்டுமென நினைத்தார். ஆகவே தேவரையாளி இந்துக் கல்லூரியில் முதலாம் வகுப்பு படித்த மகன் பேரின்பநாயகத்தை பருத்தித்துறை மெதடிஸ்த பெண்கள் பாடசாலையில் இரண்டாம் வகுப்பில் சேர்த்து அங்குள்ள விடுதியில்
(Hostel) தங்கியிருந்து கல்வி கற்கச் செய்தார். அப்போது அவருக்கு உதவியாக சைவப்புலவர் சி. வல்லிபுரத்தின் மகள் திலகவதியார் இருந்தார். பின்பு பருத்தித்துறை ஹாட்லி கல்லூரியிலும், யாழ்ப்பாணம் பரியோவான் கல்லூரியிலும் ஆங்கில மொழியிலேயே உயர் கல்வியைப் பெற்றார். பின்பு சிலகாலம் கொழும்பு அக்குவைனாஸ் உயர்கல்வி நிறுவனத்திலும் கல்விபயின்றார்.

அமரர் பேரின்நாயகம் சட்டத்தரணியாகி சமூகசேவை ஆற்றவேண்டுமென்பதே அவரது தகப்பனாரின் குறிக்கோளாக இருந்தது. தகப்பனின் விருப்பத்தை அமரர் நிறைவேற்றினார். அமரர் அவர்கள் 1965 ஆம் ஆண்டு சட்டக்கல்லூரியில் சேர்ந்து 1968 ஆம் ஆண்டு சட்டத்தரணியாக (அக்காலத்தில் Proctor S.C. and Notary Public) சத்தியப்பிரமாணம் செய்தார். இவர் சட்டக்கல்லூரியில் கல்வி பயின்ற காலத்தில் இ.சிறீனிவாசன், தந்தை செல்வாவின் மகன் S.J.V.C.சந்திரகாசன், A.E. பரராஜசிங்கம், C.J.de S.அமரதுங்க போன்ற பலர் நல்ல நண்பகளாகக் கிடைத்தார்கள். அவர்களின் நட்பு இறுதிவரை தொடர்ந்திருந்தமை குறிப்பிடத்தக்கது.

## சட்ட வாழ்க்கை

இவர் சட்டத்தரணியாக சத்தியப்பிரமாணம் செய்தபின்னர் சிறிது காலம் கொழும்பில் பிரபல சட்டதரணிகளாக இருந்த திருவாளர்கள் சாள்ஸ் வேதக்கன், சம்பந்தன் ஆகியோருக்கு கனிஷ்ட (Junior) சட்டத்தரணியாக வேலைபார்த்து தொழிலிலுள்ள நெளிவு சுளிவுகளையெல்லாம் கற்றுக்கொண்டார். இவர் 1970களில் பயங்கரவாத தடைச் சட்டத்தால் கைது செய்யப்பட்ட இளைஞர்களின் விடுதலைக்காகவும், தமிழ் அரசியல் தலைவர்கள் மீது தொடுக்கப்பட்ட அரசியல் வழக்குகளிலும் ஆஜராகினார். இலங்கை வரலாற்றில் மிக முக்கிய வழக்குகளில் ஒன்றான குட்டிமணி, தங்கத்துரை, ஜெகன் ஆகியோருக்கு எதிரான வழக்கில் ஆஜரான சட்டத்தரணிகளில் அமரரும் ஒருவர். 1983 இல் கறுப்பு ஜூலை இனக்கலவரத்தின் பின்னர் கொழும்பில் இருந்து மீண்டும் சொந்த ஊரான வதிரியில்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

1987 ஆம் ஆண்டுவரை தனது சட்டத்தொழிலை செய்துவந்த அமரர் 1987ன் பின்னர் தனது நண்பர்களான இ.ஸ்ரீநிவாசன், A.E.பரராஜசிங்கம் ஆகியோருடன் இணைந்து மீண்டும் கொழும்பில் பணியாற்றினார்.

## இல்வாழ்க்கை

1969 ஆம் ஆண்டு ஆவணி மாதம் 29 ஆம் திகதி டாக்டர் சிலம்பு மாசிலாமணி மற்றும் மகேஸ்வரியின் (சொந்த மாமியார்) புதல்வி சந்திரலேகா அவர்களை திருமணம் செய்தார். இவர்களின் சிறப்பான திருமண வாழ்க்கையின் பயனாக மூன்று மக்கட் செல்வங்களைப் பெற்றார். மூத்த மகள் திருமதி மங்களேஸ்வரன் மீரா பிரான்ஸ் நாட்டில் வசிக்கிறார். வட இலங்கை சங்கீத சபை பரீட்சையில் ஆசிரியர் தரத்தில் சித்தியடைந்து "பரதகலா வித்தகர்" பட்டம் பெற்றார். இவர் எழுதிய "நிருத்தியம்" எனும் புத்தகம் வடமாகாண சாகித்திய விருது பெற்றது. இவர் மல்லாகத்தை சேர்ந்த தற்போது பிரான்சில் வசித்துவரும் மங்களேஸ்வரன் என்பவரை திருமணம் செய்து தற்போது பிரான்ஸில் வசித்துவருகின்றார். அத்துடன் அங்கே "நிருத்தியாலயம்" எனும் கலைக்கல்லூரியை இயக்குகிறார். கொழும்பில் வசித்த காலத்தில் மீரா கணினி வடிவமைப்பு துறையில் தேர்ச்சி பெற்று வாழ்த்து அட்டைகள் வடிவமைக்கும் தனியார் நிறுவனம் ஒன்றில் முதன்மை வடிவமைப்பாளராகவும் பணிசெய்தவர்.

இரண்டாவது மகள் திருமதி முரளிபாரதி மதுரா பிரித்தானிய கற்கை நெறியான British Computer Society பரீட்சைகளில் சித்தி எய்தியதுடன் கொழும்பு பல்கலைக் கழகத்தில் தகவல் தொழில் நுட்பத்தில் பட்டப்பின் டிப்ளோமா (Post Graduate Diploma in IT) தேர்ச்சி அடைந்து தற்போது யாழ்ப்பாண பல்கலைக்கழகத்தில் பதவிநிலை முகாமைத்துவ உதவியாளராகக் கடமையாற்றுகிறார். இவர் மட்டுவிலைச் சேர்ந்த Quantity Surveyor ஆக கடமையாற்றும் ம.முரளிபாரதி என்பரை திருமணம் செய்தார். மதுராவும் வட இலங்கை சங்கீதசபையினர் நடாத்தும் பரீட்சையில் நடனத்தில் ஐந்தாம் தரம் வரை சித்திபெற்றவர் என்பது குறிப்பிடத்தக்கது.

மகன் மயூரன் பிரித்தானிய கற்கை நெறியான British Computer Society பரீட்சைகளில் சித்தியெய்தி பின்னர் லண்டன் கிறின்விச் பல்கலைக்கழகத்தில் கணினி விஞ்ஞானத்தில் இளநிலை பட்டப்படிப்பை பூர்த்தி செய்து தற்போது இலங்கை தகவல் தொழில்னுட்ப நிறுவனத்தில் (Sri



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

Lanka Institute of Information Technology (SLIIT)) தகவல் தொழில்னுட்பத்தில் முதுநிலைக் (Master of Science in IT) கல்வியைத் தொடருகின்றார். அத்துடன் திருகோணமலை தேசிய சமூக நீர்வழங்கல் திணைக்களத்தில் அபிவிருத்தி உத்தியோகத்தராகவும் திருகோணமலை, வவுனியா உயர் தொழில்நுட்ப கல்லூரிகளில் வருகைதரு விரிவுரையாளராகவும் கடமையாற்றுகின்றார். இவர் திருகோணமலையைச் சேர்ந்த ஆசிரியை சசிலதா என்பவரைத் திருமணம் செய்தார்.

தன் மனைவியின் சகோதர சகோதரிகளை தன் சகோதரர்களாகவும், அவர்களின் பிள்ளைகளை தன் பிள்ளைகளைப் போலவே வழிநடத்தினார்கள். அமரர் தனது பேரப்பிள்ளைகளான அபராஜிதன், தாருஹாசினி, அக்ஷரா, அக்சரன் ஆகியோருடன் தனது வாழ்க்கையின் அந்திமகாலத்தை பெரும்பாலும் செலவிட்டிருந்தார்.

## இசைப்பயணம்

இவர் கல்விகற்ற காலத்தில் இருந்தே ஒரு சிறந்த கர்நாடக சங்கீத ரசிகனாகவும் இருந்தார். அவரால் பண்ணோடு பாடமுடியாவிட்டாலும் சங்கீதத்தில் உள்ள ராகங்கள் போன்றவற்றை நன்கு அறிந்து நல்ல விமர்சகராகவும் இருந்தவர். அக்காலத்தில் கொழும்பில் மிகவும் பிரபலமான தியாகராஜ கான சமாஜத்தில் ஒரு முக்கிய உறுப்பினராக இருந்து வருடாந்தம் தியாகராஜ உற்சவம் நடைபெறும் காலங்களில் பெரும் தொண்டாற்றினார். இதன் காரணமாக அக்காலத்தில் மிகவும் பிரபலம் வாய்ந்த இசைக் கலைஞர்களான குருவாயூர் K.K.அச்சுதன் (கடம்), கணேச சர்மா (மிருதங்கம், கெஞ்சிரா), ஈழநல்லூர் T.V.பிச்சையப்பா (வயலின்) போன்ற இசைக் கலைஞர்களின் நட்பும் கிடைத்தது. இன்னொரு முக்கியமான பதிவையும் குறிப்பிடவேண்டியுள்ளது. அதாவது டாக்டர் எம். பாலமுரளிகிருஷ்ணா அவர்கள் தனது இசைக்குழுவினருடன் இலங்கைக்கு வந்தபொழுது யாழ்ப்பாணம் பழைய நகரசபை மண்டபத்தில் ஒரு பெரும் இசைக் கச்சேரியை தனியாளாக முன்னின்று நடாத்திய பெருமை அமரர் அவர்களையே சாரும். மேலும் அக்காலத்தில் நா.சுந்தரலிங்கம் அவர்களின் நெறியாள்கையில் அமரர் அவர்களும் R.சிறீனிவாசன் அவர்களும் பல மேடை நாடகங்களிலும் நடித்துள்ளனர்.

அமரர் பேரின்பநாயகம் சட்டப் புத்தகங்களை மட்டும் படிக்கவில்லை. கலை, கலாசாரம், பண்பாடு, இலக்கியம், சமூகம், அரசியல் போன்ற பல்வேறு புத்தகங்கள் அவரது வீட்டு வாசிகசாலையில் உள்ளன. இயல், இசை, நாடகம் எனும்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

முத்தமிழையும் அமரர் பேரின்பநாயகம் விட்டுவைக்கவில்லை. யாழ்ப்பாணத்திலும், கொழும்பிலும் நடைபெறும் சகல கலை நிகழ்ச்சிகளிலும் தவறாது கலந்துகொள்வார். தான் ரசித்தவற்றை மற்றவர்களும் ரசிக்க வேண்டும் என்ற விருப்பம் அவரிடம் மேலோங்கி இருந்தது. இன்று இலங்கையில் புகழ் பெற்ற சங்கீதபூஷணங்களாக வலம் வந்து வரலாறு படைத்த ஏ.கே.கருணாகரன், பத்மலிங்கம், திலகநாயகம் போல் போன்றோரை தலைநகரில் அறிமுகம் செய்து அவர்களுடைய இசைப் பயணத்தை ஆரம்பித்து வைத்த பெருமை அன்னாரையே சாரும்.

சட்டத்தரணிகள் சங்கம் கொழும்பில் நடத்திய "நீதிரங்க" இசை நிகழ்ச்சியில் அமரர் தம்பூராக் கலைஞராகக் கலந்துகொண்டார் கொழும்பில் இருந்து வதிரிக்கு வரும்போது இங்குள்ள இசை ஆர்வலர்களின் வீடுதேடிச்சென்று அளவளாவுவார். அமரர். டாக்டர் கோ.சபாநாதன், அமரர் சி.புவனேந்திரன், திரு வே.சிவபாதராசா போன்றவர்களுடன் இசை பற்றி உரையாடுவதில் அலாதியான பிரியம் உடையவர். அத்துடன் கொழும்பில் நடைபெறும் இசை, நடன அரங்கேற்றங்கள் , விழாக்கள் போன்றவற்றை ரசித்து எழுதிய விமர்சனங்கள் பல தமிழிலும் ஆங்கிலத்திலும் பத்திரிகைகளில் பிரசுரமாகின.

## சமய சமூகப் பணிகள்

வதிரியில் பூவற்கரையில் அண்ணமார் வழிபாடு இருந்தது. அப்போது அந்த அண்ணமார் பிள்ளையாராக மாற்றமடைவார் என எழுதியவர் கவிஞர் வே.ஆழ்வார். ஆழ்வாரின் மகன் மயிலு சிறந்த ஓவியர். மயிலுவின் மகன் செல்லத்துரையின் சமூக சேவையைப் பாராட்டி "சமூகஜோதி" எனும் கௌரவம் வழங்கப்பட்டது. செல்லத்துரையின் மகன் அமரர் பேரின்பநாயகம் எமது சமூகத்தின் முதலாவது சட்டத்தரணி ஆவார்.

வதிரி, பூவற்கரைப் பிள்ளையார், பொலிகண்டி கந்தவனக் கோவில், தொண்டமானாறு செல்வச் சந்நிதி ஆகியவற்றின் மீது மிகுந்த பக்தி கொண்டவர்.கந்தசஷ்டிக் காலங்களில் சூரன் போர் நடாத்துவதற்கான சூரன், சித்திரத்தேருக்கான வடம், ஆளுயர குத்துவிளக்குகள் போன்றவற்றை பூவற்கரை பிள்ளையாருக்கு உபகரித்தவர்.

குறும்படப் போட்டி, "வதிரி ஒளிர்கிறது" ஆகியவற்றை நடத்திய அட்சரம் அறக்கட்டளையின் முதன்மை ஆலோசகர். அத்துடன் வதிரி பூவற்கரைப் பிள்ளையாருக்கு அன்னாரின்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

பெரிய தந்தையான சைவப்புலவர் சி.வல்லிபுரம் அவர்கள் எழுதிய பதிகங்களை எம்மவர்களைக் கொண்டு இசைவடிவில் வெளியிடுவதற்கு முக்கியமானவர்.

சைவப்பெரியார் சூரனின் வழித்தடத்தில் காந்தீயத்தைக் கைக்கொண்டு புலால் உணவை தவிர்த்த இவரது பெற்றோர்களான செல்லத்துரை, மீனாட்சியம்மா ஆகியோரின் வழியைப் பின்பற்றி அமரர் பேரின்பநாயகம், மனைவி சந்திரலேகா, மகள் மீரா, மகன் மயூரன் ஆகியோரும் சைவ உணவுடன் சிவதீட்சை பெற்ற சைவர்களாகும்.

அமரரின் சிறிய தந்தையார் அமரர் ஆ.ம.வடிவேல் அவர்கள் எமதுகிராமத்தின் பாதணி உற்பத்தியை உலகுக்கு அறிமுகம் செய்தவர். பாதணி கூட்டுறவு தொழிற்சாலையை ஆரம்பித்து பருத்தித்துறைக்கு அருகே இருக்கும் பாதணியை காலிவரை கொண்டு சென்றவர். அவர் எழுதிய "தங்கச்சுரங்கம்" எனும் புத்தகம் வதிரிக் கிராமத்தின் பொருளாதார வளர்ச்சியை எடுத்தியம்பியது. பாதணி கூட்டுறவுத் தொழிற்சாலையின் முகாமையாளராக அமரர் ஆ.ம. வடிவேல் கடமையாற்றியதால் "மனேச்சர்" என அவர் அழைக்கப்பட்டார். மிகச் சிறந்த பேச்சாளரான அமரர் வடிவேல் அன்றைய அரசியல் கூட்டங்களின் நட்சத்திரப் பேச்சாளராக வலம் வந்தார். சிறிய தந்தையை போலவே அன்னாரும் அரசியலில் ஆர்வம் கொண்டிருந்தாலும் எந்தவொரு கட்சி அரசியலுக்கும் தன்னை முழுமையாக ஈடுபடுத்தாமையினால் அன்னாருக்கு சகல கட்சிகளிலும் பல பிரமுகர்கள் நண்பர்களாக இருக்ககூடியதாக இருந்தது.

பேரின்பநாயகம் அவர்கள் தனது தந்தையாரின் விருப்பப்படி ஒரு சமூகசேவையாளராக வாழ்ந்து 2021 ஆம் ஆண்டு பங்குனி மாதம் 2ம் திகதி 84வது வயதில் சிவபதம் அடைந்தார்.

ஓம் சாந்தி! சாந்தி!! சாந்தி!!!

தொகுப்பு

குடும்பத்தினர்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# "வாழ்வதும் வீழ்வதும் மானுடம் தழைக்கவே" எடுத்துக்காட்டாய் வாழ்ந்தவர் பேரின்பநாயகம்! (பெரி)

"பெரி" எங்கள் நட்பு வட்டத்தில் அனைவருக்கும் தெரிந்த பெயர். வறட்சியையும், வெப்பத்தையும் மிகைப்படுத்தும் பாலைவனம் ஓர் பாழ்நிலமே. அப்பாழ்வெளியிலும் நிழலும், சுவையான பசிதீர்க்கும் பழமும் தரும் உயிர் விருட்சமே பேரீச்சை.

பேரீச்சை போல் கைது - சிறையடைப்பு - இராணுவக்காவல் என நெருக்குண்ட ஈழத்தமிழர் வாழ்வில் என்னுடன் இணைந்து, இனவாத நெருப்பில் சிக்கிய பல நூறு ஈழத்தமிழ் இளைஞர்களைக் காத்து, அவர்கள் வாழ்வில் இன்பக்காற்று வீச உதவிய பேரின்பநாயகம் என்றும் என்னால் மறக்க முடியாத உற்ற உறவே.

வன்சொல் பேசா மனிதன், மாற்றாரையும் தன்வசப்படுத்தும் மென்மைப்பேச்சு, அதேவேளை கொள்கையை விட்டுக்கொடுக்காத திடமான மனம். இவைகளே சட்டத்தரணி பேரின்பநாயகம் அவர்களின் வரைவிலக்கணம்.

அன்று பனாகொட இராணுவமுகாம் தமிழர் கால் பதிக்கத் தயங்கும் இடம். பயங்கரவாத தடைச்சட்டத்தின் கீழ் கைதாகி அடைபட்ட தமிழர்களைக் காத்து வெளிக் கொணர்ந்தால் போதும், அதுவே தமிழ்ச் சமூகத்தின் அன்றைய இலக்கு. அந்த மனிதாபிமானப் பணியில் எனது நண்பர் படையின் முன்னணிப் போர் வீரர்களில் தன்னைச் சிறப்புற அடையாளம் காட்டியவரே செயல் வீரர் பேரின்பநாயகம்.

சன்சோனி கமிஷன், நீதிமன்றங்கள் என இனவன் முறையில் சிக்கித் தவிக்கும் ஈழத்தமிழர்க்காய் ஊதியம் பாராது ஓடி, ஓடி சட்டப்பணியில் தோள் கொடுத்து, பாதிக்கப்பட்ட தமிழர் நஷ்ட ஈடு பெறக் கடினமாகப் பாடாற்றிய நல்லுறவாம் பேரின்பநாயகம் அவர்களின் நினைவு என்பது கல்மேல் எழுத்தே.

அவரிடம் கொடுக்கப்பட்ட பணிகள் எதுவாயினும் அவை இலக்கை அடைந்தே தீரும் என்பதை அனுபவத்தில் உணர்ந்தவன் நான்.

ஜாதி, இன, மதம் கடந்த மனிதாபிமான உள்ளம் கொண்ட அவரின் மென்மைப் பண்பே காணிப்பதிவு



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

அலுவலகங்கள், கச்சேரிகள், மாநகரசபைகள், அரச அலுவலகங்கள் என அனைத்திடங்களிலும் பணியாற்றும், அடிமட்ட ஊழியர்களிலிருந்து, உயர் அதிகாரிகள் வரை அவரிடம் நட்புப் பாராட்ட வழிவகுத்தது எனலாம்.

கொழும்பில் முத்தமிழ் வளர்க்க 1960களில் உருவானது "தியாகராஜ கான சபா" என்ற அமைப்பு இயல், இசை, நாடகத்துறைகளில் திறமையிருந்தும் வாய்ப்பின்றி இருந்த தமிழர்கள் பலருக்கும், வாய்ப்பு வழங்கி ஊக்குவிப்பதே அச்சபாவின் நோக்கமாகும்.

அதன் செயல்பாடுகளில் துறைசார் விற்பன்னர்களின் நெறிப்படுத்தலும், பங்கும் முக்கியம் என்பதால், அன்று இலங்கையில் பிரபல கடம் வித்துவானாகத் திகழ்ந்த "அச்சுதன் மாஸ்டர்" தலைமையில் "தியாகராஜ கான சபா" அரும்பணி ஆற்றியது. அச்சபாவின் செயல்பாடுகளில் எனது நண்பன் ரங்கநாதன் ஸ்ரீநிவாசனுடன் இணைந்து, தோழ் கொடுத்துக் கொண்ட பேரின்பநாயகம் உழைப்பு கொழும்பில் முத்தமிழ் வளரக் காரணமாய் இருந்ததையும் இவ்விடத்தில் பதிவு செய்ய விரும்புகின்றேன்.

இவ்விடத்தில் "தந்தை செல்வா அறக்கட்டளை" யில் அவர் ஆற்றிய பொறுப்புமிக்க பணிகளையும் எண்ணிப் பார்க்கின்றேன். வருவாயை மட்டுமே வாழ்வாகக் கொள்ளும் இன்றைய சமூகத்தில் பிரதிபலன் கருதா சமூகநலன் பேணும் பேரின்பநாயகம் போன்ற உன்னத கரம் ஒன்று என் கை நழுவியது எனக்கும், தமிழ்ச் சமூகத்துக்கும் உள்ளபடி பேரிழப்பே.

இவன்
நட்பின் பலம் உணர்ந்த
**சா.செ.சந்திரகாசன்**
(நிறுவனர்)
(ஈழ ஏதிலியர் மறுவாழ்வுக் கழகம்)



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# ❖ Peri, a unique and unforgettable close-to-heart friend of over six decades.

Although I feel a pang in the heart at the loss of a dear friend of more than six decades, pleasant feelings also fill my heart in going down a cherished memory lane, recollecting my close friendship with "Peri" as he was fondly called by his close but comparatively large circle of friends.

Like me, many will deeply feel his departure.

I first met Peri when I joined St. John's College, Jaffna in 1958, to which my father got me admitted after the race riots in Colombo in that year. He was a hosteller and I, a day-scholar. From day one, he became close to me and I noticed that he had many such close friends, always jovial and mixing freely. Thereafter, after a short break we happened to meet again at the Ceylon Law College for our Law Studies. Here too, we had pleasant times with some close friends belonging to all races and religions, enjoying practical jokes played on each other and holiday trips together to many parts of the Island that was Ceylon (now Sri Lanka).I have vivid pleasant memories of our holiday group visiting and having meals at Peri's home in one of our jaunts to Jaffna.

At Law College we were also closely associated in working for the Law College Hindu Students Union.

There was an inevitable break brought about by the 1983 Black July Race Riots when he shifted to Jaffna and I and family to Chennai in India. However from 1987 onwards, our close contact and friendship recommenced, when we began practicing our legal profession in partnership with our other close friend Mr. A E Pararajasingham (Para) in Colombo. So I well knew and understood Peri and, the core of his character.

Almost everyone who came into contact



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

with him, sans race, religion, status in life, became his friend. By nature he was humble and exuded friendship, always and all around.

I have pleasant memories of attending his wedding in his home village in Jaffna with our close friends. We were surprised to find some unexpected Sinhalese friends too, who had travelled all the way to Jaffna to attend the happy function. Peri was a right-hand man to me in most of my family functions, always at hand and ready to render any needed assistance. Likewise he was also a trouble shooter whenever any friend had personal or professional problems or difficulties.

He stood by his friends during happy times and as well as periods of trials and tribulations.

Beyond the legal fraternity, he was able to befriend almost all those with whom he had to deal with in discharging his duty as an Attorney-at law and Notary Public, in the Registries of various Courts, Land Registries, Kachcheries, Municipalities and other offices in many Districts, North, East and South, from the lowest cadres to the highest in office. Admirably he had an inborn characteristic of being ably befriend anyone everywhere and at anytime.

Peri and I and few other colleagues in the legal profession, led by Mr. S C Chandrahasan (son of Thanthai Chelva) were deeply involved in lending legal assistance to Tamil youths who were detained under the Prevention of Terrorism Act (PTA), by filing nearly 300 Habeas Corpus actions in the courts. For this purpose Peri and I and other colleagues visited the detainees, with Court permission, continuously during many week-ends, at the Welikade Prisons and Panagoda Army Camp. In so doing Peri had to sacrifice his personal and family duties and commitments.

One of our close and intimate friends was Mr. Thangathurai, former FP/TULF Member of Parliament for Trincomalee/Muthur, (who we fondly called Thanganna). When he was an MP, Peri and I met him



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

at least thrice a week after work, in his MPs' quarters near the Parliament and discussed the then current political situation and helped him with suggestions for his speeches and documents. Our close friendship continued even when he was not an MP.

With all these he was also deeply affectionate towards his family. I knew his family, extended family and relatives well just as he did about mine. Like his parents and family, he was a born and strict vegetarian; he was deeply religious and observed many Hindu religious rituals and fasts, particularly the "Kantha Shasti Viratham".

Deep love and admiration for Carnatic music was inborn in him. He knew closely and intimately many leading Carnatic vocalists and instrumentalists in the country. He and I, led by our Guru, Gatam Vidvan Guruvayur K K Atchuthan, were deeply involved in the Music Society "Illankai Theagarajah Gana Samajam". The Samajam conducted Annual Music Festivals called "Theagaraja Isai Vizha" annually for five days at the Wellawatte Manikka Vinayagar Temple in Colombo for many continuous years. Peri and I spent days and nights along with our Guru and others in organizing and conducting these annual festivals which were looked forward to by thousands of "rasikas" and some of the programmes were relayed live by the then "Radio Ceylon".

A very striking feature in Peri's character is the total absence of ego in his inner self. In a nutshell, a great and sincere noble soul was Peri.

Peri, we miss you deeply but take solace in the definite belief and conviction that you will be at the feet of Our Lord enjoying eternal bliss.

**Ranganathan Srinivasan**
Attorney-at-Law
Australiya



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# 'பெரி' ஆறு தசாப்தங்களுக்கு மேலான ஒரு தலை சிறந்த மறக்கமுடியாத ஆத்ம நண்பன்

ஆறு தசாப்தங்களுக்கு மேலான நண்பனின் இழப்பையிட்டு மனம் வேதனை அடைகின்ற வேளையிலும், அவரது நட்பு ரீதியான இனிய நினைவுகளை மீட்டுப்பார்ப்பதில் எனது இதயம் திருப்தியடைகின்றது. என்னைப்போலவே மேலும் பலர் அவரது இழப்பையிட்டு வேதனையடைந்திருப்பார்கள்.

நான் முதன் முதலாக பெரியைச் சந்தித்தது 1958 ஆம் ஆண்டு யாழ்ப்பாணம் சென் ஜோன்ஸ் கல்லூரியில் ஆகும். கொழும்பில் இடம்பெற்ற இனக்கலவரங்களின் பின்பு எனது தகப்பனார் என்னை அங்கு பாடசாலையில் சேர்த்திருந்தார். பெரி அங்கு விடுதி மாணவனாகவும், நான் நாளாந்தம் சென்றுவரும் மாணவனாகவும் கல்வி கற்றுக்கொண்டிருந்தோம். முதல் நாளிலிருந்தே என்னுடன் நெருங்கிப் பழக ஆரம்பித்தார். அவருக்கு ஏற்கனவே அங்கு ஒரு நெருங்கிய நட்பு வட்டாரம் உண்டு என்பதை அவதானித்தேன். அவர் எப்போதும் எல்லோருடனும் உற்சாகமாக கலந்து உரையாடுபவர்.

பின்பு சில கால இடைவெளியின் பின்னர் அவரை இலங்கை சட்டக்கல்லூரியில் மீண்டும் சந்திக்கும் சந்தர்ப்பம் எனக்குக் கிடைத்தது. அங்கேயும் இன, மத பேதங்களுக்கு அப்பால் பல்வேறு சட்டக் கல்லூரி மாணவர்களோடும் நெருங்கிப் பழகிய பல இனிய அனுபவங்களைப் பெற்றார். எங்கள் மத்தியில் நகைச்சுவையான உரையாடல்களுடன் சிலோன் தீவின் (தற்போது ஸ்ரீலங்கா) பல பாகங்களுக்கும் உல்லாசச் சுற்றுலாக்கள் சென்று வருவோம். அவ்வாறான ஒரு விடுமுறைச் சுற்றுலாவின் போது யாழ்ப்பாணத்தில் பெரியின் வீட்டில் உணவு அருந்தியதை நினைவுத் திரையில் மீட்டுப்பார்க்கிறேன். சட்டக்கல்லூரியில் இந்து மாணவர் சங்கச் செயற்பாடுகளிலும் நாங்கள் இருவரும் இணைந்து பணியாற்றினோம்.

1983ல் இடம்பெற்ற கறுப்பு ஜூலைக் கலவரத்தின் பின்பு எதிர்பாராத பிரிவு எங்களிடையில் ஏற்பட்டது. அவர் யாழ் சென்றார் நானும் குடும்பமும் சென்னை சென்றோம். இருந்தாலும் 1987ல் இருந்து நட்பும் தொடர்பும் மீண்டும் தொடங்கியது. நாங்கள் இருவரும் சட்டத் தொழில்பயிலுனர்களாகக் கடமையாற்றிக் கொண்டிருந்தபோது இன்னொரு நெருங்கிய நண்பனான பரராஜசிங்கம் (பரா) என்பவருடன் இணைந்து பங்குடமை அடிப்படையில் எங்கள் சட்டத்தொழிலை



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

ஆற்றிக்கொண்டிருந்தோம். இன, மத, சமூக அந்தஸ்துகளை கடந்து அவருடன் தொடர்புகொண்ட அனைவரையும் தனது நண்பர்களாக்கியவர் பெரி. சுபாவத்தில் அடக்கமானவர் எப்போதும் தன்னைச் சூழ ஒரு நட்பு வட்டத்தைப் பேணியவர்.

அவரது பிறந்த ஊருக்கு எங்கள் நெருங்கிய நண்பர்களோடு சேர்ந்து அவரது திருமண வைபவத்துக்கு சமூகமளித்த இனிய அனுபவத்தை மீட்டுப்பார்க்கின்றேன். அவரது திருமணச்சடங்கில்நாங்கள்எதிர்பாராதபலசிங்களநண்பர்களைக் கண்டு ஆச்சரியமடைந்தோம். நீண்ட தூரம் பிரயாணம் செய்து அவர்கள் யாழ்ப்பாணம் வந்து அவரது திருமண வைபவத்தில் கலந்துகொண்டார்கள். பெரி எனது வலது கையானவர், எனது பல குடும்ப விழாக்களில் கலந்துகொண்டு எப்போதும் தேவையான உதவிகளைச் செய்வதற்க்குத் தயாராகவிருப்பவர். அதே போன்று தனது நண்பர்கள் எதிர் நோக்கும் பிரச்சனைகளைத் தீர்த்துவைக்கும் ஒரு தீர்ப்பாளராகத் திகழ்ந்தவர். அவர்களின் இன்ப துன்பங்களின் போது தோளோடு தோளாக நின்றவர். தனது சட்டக் கடமைகளை ஒரு வழக்கறிஞராகவும், பிரசித்த நொத்தாரிசாகவும் அணுகி எல்லோரையும் நண்பர்களாக்கிக் கொள்ளும் வல்லமை பெற்றவர். இதில் உயர்ந்தவர், தாழ்ந்தவர், படித்தவர், படியாதவர் என்ற பேதமின்றி நீதிமன்றங்களில், காணிப் பதிவாளர் திணைக்களத்தில், மாவட்ட செயலகங்களில், மாநகரசபைகளில், வடக்கு, கிழக்கு, மேற்கு, தெற்கு என சகல மாவட்டங்களிலும் பணிகளுக்குச் சென்றபோது சகலருடனும் தனது நட்பின் முத்திரையைப் பதித்தவர். எங்கும் எப்போதும் எவரையும் நண்பர்களாக்கும் அவரது பிறவிச் சுபாவம் வியந்து பாராட்டத்தக்கது.

பெரியும், நானும் சட்டத்துறையில் பணியாற்றுகின்ற ஏனைய சில நண்பர்களும் திரு.எஸ்.சி.சந்திரஹாசன் (தந்தை செல்வா அவர்களின் மகன்) அவர்களின் தலைமையின் கீழ் 300க்கு மேற்பட்ட ஆட்கொணர்வு மனுக்களை நீதிமன்றத்தில் தாக்கல் செய்து பயங்கரவாத தடுப்புச் சட்டத்தின் மூலம் தடுப்புக் காவலில் இருந்த தமிழ் இளைர்களுக்கு சட்ட உதவிகளை வழங்கியிருந்தோம். இதற்காக பெரியும் நானும் ஏனைய நண்பர்களும் நீதிமன்ற அனுமதியுடன் வெலிக்கடை சிறைச்சாலையிலும், பனாகொட இராணுவ முகாமிலும் தடுப்புக்காவலில் உள்ளவர்களை பல வார இறுதிகளில் தொடர்ச்சியாகச் சந்தித்தோம். இதற்காக பெரி தன் தனிப்பட்ட மற்றும் குடும்ப கடமைகளை தியாகம் செய்திருந்தார்.

எம்மால் தங்கண்ணா என அன்புடன் அழைக்கப்பட்ட முன்னாள் திருகோணமலை, மூதூர் பாராளுமன்ற உறுப்பினர் அமரர்.தங்கத்துரை (தமிழர் விடுதலைக்கூட்டணி) எங்களின்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

மிக நெருக்கத்துக்குரிய நண்பராவார். அவர் பாராளுமன்ற உறுப்பினராக இருந்த காலத்தில் நானும் பெரியும் எங்கள் வேலைகள் முடிந்தபின்னர் வாரத்தில் ஆகக்குறைந்தது 3 நாட்களாவது பாராளுமன்றத்துக்கு அருகில் இருந்த அவரது உத்தியோக வாசஸ்தலத்தில் சந்தித்து அன்றைய அரசியல் நிலைமைகளை ஆராய்ந்து அவரது உரைகளுக்கும் ஏனைய ஆவண உருவாக்கங்களுக்கும் எமது ஆலோசனைகளையும், உதவிகளையும் வழங்கியிருந்தோம். எமது இந்த நட்பானது அவர் பாராளுமன்ற உறுப்பினர் அல்லாத காலங்களில் கூட தொடர்ந்தது.

அத்துடன் அவர் தன்னுடைய குடும்பத்தின் மேல் மிகுந்த பாசம் வைத்திருந்தார். அவருடைய குடும்பத்தினரையும், ஏனைய உறவினர்களையும் நான் நன்கு அறிந்தது போலவே அவரும் என்னுடைய குடும்பத்தினரையும், உறவினர்களையும் நன்கு அறிந்துவைத்திருந்தார். தனது பெற்றோர்களைப் போலவே அவரும் பிறப்பில் இருந்து சைவ உணவு உண்பவராக வாழ்ந்தவர். அத்துடன் அவர் இந்து மத சடங்குகளையும் விரதங்களையும் கடைப்பிடித்தார். குறிப்பாக கந்த ஷஷ்டி விரதம் அனுஷ்டித்தவர்.

கர்நாடக இசை மீதான ஆழ்ந்த அறிவும் பற்றும் அவரில் இயல்பாகவே இருந்தது. அவர் எம் நாட்டில் இருந்த பிரபல்யமான முன்னணி கர்நாடக இசைக் கலைஞர்களையும், வாத்தியக் கலைஞர்களையும் நன்கு அறிந்து பழகியவர். நானும் அவரும் எங்களது குருவான கடம் வித்துவான் குருவாயூர் கே.கே.அச்சுதன் அவர்களின் தலைமையில் "இலங்கை தியாகராஜர் கான சமாஜம" என்ற இசை அமைப்பில் அதிகமாக ஈடுபட்டிருந்தோம். பல வருடங்களாக சமாஜமானது கொழும்பு, வெள்ளவத்தை மாணிக்கப் பிள்ளையார் ஆலயத்தில் வருடந்தோறும் தொடர்ச்சியாக ஐந்து நாட்கள் "தியாகராஜர் இசை விழா" நடாத்தியது. பல்லாயிரக்கணக்கான ரசிகர்களை ஈர்த்த இந்த நிகழ்வை நடாத்த நானும், பெரியும் இரவு, பகல் பாராது எங்கள் குருவுடன் அர்ப்பணிப்புடன் பணிபுரிந்தோம். சில நிகழ்வுகள் நேரடியாக ரேடியோ சிலோனில் ஒலிபரப்பப்பட்டது.

பெரியின் மிகவும் குறிப்பிடத்தக்க அம்சம் அவர் ஒரு நேர்மையான, உன்னதமான ஈகோ அற்ற ஆத்மா. பெரி நாங்கள் உங்களை மிகவும் ஆழமாக இழந்து நிற்கின்றோம் ஆனால் உங்கள் ஆத்மா எல்லாம் வல்ல இறைவனின் பாதாரவிந்தங்களில் சாந்தியடையும் என ஆறுதல் அடைகின்றோம்.

**ரங்கநாதன் ஶ்ரீநிவாசன்**
சட்டத்தரணி
அவுஸ்திரேலியா

தமிழ் மொழிபெயர்ப்பு
**திரு.இ.உதயசங்கர்**



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# "நினைவழியா நாட்கள்"

"எங்கு வார்த்தைகள் தடைப்படுகின்றதோ அங்கே சங்கீதம் ஆரம்பிக்கின்றது" என்ற புதுமொழிக்கேற்ப வாழ்ந்தவர் அண்ணன் பேரின்பநாயகம். பகல் எல்லாம் வழக்கறிஞராக வார்த்தைகளுடனும், சட்ட நுணுக்கங்களுடனும் வாழ்ந்தவர் மாலையானதும் கர்நாடக சங்கீதத்துடன் இரண்டறக்கலந்துவிடுவார். இது 70களின் நினைவுகளில் அழிக்கமுடியாத பக்கங்களிலொன்று.

பணி நிமித்தம் நான் தலை நகருக்கு வந்தபோது, நான் தங்குவதற்காக தான் குடியிருந்த அறையில் எனக்கும் இடம் தந்து ஆதரித்ததை வாழ்நாளில் மறக்கமுடியாது.

ரேடியோ சிலோன் இந்தியாவிற்கூட புகழ் உச்சியில் இருந்த காலமது. அந்தக் காலத்தில், நேரம் கிடைக்கும் போதெல்லாம் தமிழ்நாட்டு வானொலி நிலையங்கள் ஒலிபரப்பும் கர்நாடக இசை நிகழ்ச்சிகளையும், வாத்திய இசை நிகழ்ச்சிகளையும் கிரமமாகக் கேட்டு தனது இசை ரசிக மேதமையை வளர்த்துக்கொண்டதோடல்லாது ராகங்களை இனங்காணும் திறமையையும் வளர்த்துக்கொண்டார்.

சட்டத்தரணி இ.சிறீனிவாசன், கடம் வித்வான் கே.கே.அச்சுதன், செ.பேரின்பநாயகம் உள்ளிட்ட இசை அறிஞர்களாலும், ரசிகர்களாலும் "இலங்கை தியாகராஜர் கான சமாஜம்" என்ற மிகக்கட்டுக்கோப்பான (அந்தக் காலத்தில் நேரம் தவறாமை என்ற உன்னதக் கொள்கையோடு களத்தில் பணிபுரிந்த குழு) ஒரு நிறுவனத்தை ஆரம்பித்து ஆண்டுதோறும் தியாகராஜ உற்சவத்தை தலைநகரில் நடாத்திவந்தார்கள். இரண்டு வருடங்கள் தொடர்ச்சியாக எனக்கு வாய்ப்புத்தந்து தலைநகர் ரசிகர்களுக்கு என்னை அறிமுகப்படுத்தி வைத்தார்கள்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

நான் நிகழ்த்திய பூரணமான இசைக்கச்சேரியில் மிகவும் திருப்தியடைந்த இந்தக்குழு, மக்களின் மனதில் உள்ளதையறிய விரும்பி, கச்சேரி முடிவடைந்தபின், கச்சேரியைக் கேட்டு ரசிக்கவந்த ரசிகர்களுடன் கலந்து நின்று அவர்கள் என்ன பேசிக்கொள்கின்றனர் என்பதை அறிந்து எனக்கு பின்னூட்டத்தை வழங்கி உற்சாகப்படுத்தினார்கள்.

1969 ஆம் ஆண்டு அண்ணனின் திருமண நிகழ்வு முடிந்தபின், அவருடைய வீட்டில் எனது கர்னாடக சங்கீத இசைக்கச்சேரி இடம்பெறச் செய்தார். "வதிரியிலும் அயல் ஊர்களிலும் வாழ்ந்த பலதரப்பட்ட சங்கீத அறிஞர்களையும், ரசிகர்களையும் கொழும்பிலிருந்து வந்த எனது நண்பர்களையும் உனது இனிய இசைக்கச்சேரியும் அன்று பெய்த அடைமழையும் நனைத்ததடா தம்பி" என என்னிடம் அடிக்கடி கூறுவார். எம்.எஸ்.சுப்புலட்சுமி, Dr. எம்.பாலமுரளிகிருஷ்ணா தொடங்கி இன்றைய பத்மசிறீ ஏசுதாஸ், இசைஞானி இளையராஜா வரை இந்தியக் கலைஞர்களையும், உள்ளூர்க்கலைஞர்களையும் இசை என்னும் ஊடகம் அவரோடு இணைத்தது.

மேற்கத்திய இசை வல்லுனர்களையும் அவர்கள் இசையையும் கூட வெகுவாக ரசித்து மகிழ்ந்தார்.

அவரின் சகோதரன் என்ற முறையிலும், சிரேஷ்ட இசைக்கலைஞன் என்ற முறையிலும் அனைத்துக் கலைஞர்கள் சார்பாகவும் அமரருக்கு எனது மதிப்புமிக்க இதய அஞ்சலிகள்.

பரப்பிரம்மத்தின் பாதங்களில் இளைப்பாறுங்கள் அண்ணை....

ஓம் சாந்தி!

*சங்கீத வித்துவான்*
**ஏ.கே. கருணாகரன்**
*கொழும்பு*



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# ❖ முட்களின் மேல் என் பாதங்கள்

வலி நிறைந்த காலமதில் வழிகாட்டியாக அறிமுகமாகியவர் அமரர் பேரின்பநாயகம் ஐயா அவர்கள். அவர் இன்று எம்முடன் இல்லாத போதும், அவர் செய்த பணிகள் இன்றுவரை எங்கள் நினைவில் பயணித்துக் கொண்டிருப்பது யதார்த்தமாகும்.

அமரர் அவர்களது தந்தைக்கும் எனது தந்தையார் அமரர் வட அல்வை முருகேசனாருக்குமான நட்பும் குடும்ப உறவும் மிகவும் நெருக்கமானது. அமரர்களான, ஆசிரியர் ஆ.ம. செல்லத்துரை, சைவப்புலவர் வல்லிபுரம், கவிஞர் செல்லையா, வட அல்வை முருகேசனார் ஆகியோர், ஏக காலத்தில் வாழ்ந்து, எமது சமூக முன்னேற்றத்துக்கு பல வழிகளிலும் செயற்பட்ட சமூகமுன்னோடிகள் ஆவர்.

அந்த வகையில் அமரர் பேரின்பநாயகம் ஐயா அவர்களின் நினைவு சுமந்த சிறு குறிப்பை பதிவு செய்வதில் மனநிறைவு கொள்கிறேன். 1985 தை 9, மறக்கமுடியாத நிகழ்வாக, என் வாழ்க்கையை மாற்றிய நாளாக அமைந்தது. என்னை சமுதாயத்தில் இருந்து அகற்றி, அந்நியப்படுத்திய அத்தியாயத்தின் தொடக்க நாளும் அதுவாகும். அது எனது சிறைவாசம் ஆரம்பமான நாள். நான் உயிரோடு இல்லை என்றிருந்த என் பெற்றோருக்கு, சிறைவாசம் அனுபவிப்பதாக அறிவித்தார் அன்றைய யாழ் அரசாங்க அதிபர்.

அன்றிலிருந்து அனைத்து வழிகளிலும் என் விடுதலைக்காக, என் பெற்றோர் பல தரப்பினரையும், குறிப்பாக சட்டத்துறை சார்ந்தவர்களையும் அணுகியிருந்தனர். அந்த சூழ்நிலையில் என் தந்தையார் அமரர் முருகேசனார் அவர்கள், அமரரிடம் சென்று சட்டரீதியான ஆலோசனைகளை பெற்றுக் கொண்டதுடன், மேலும் செய்யவேண்டிய நடவடிக்கைகளை அறிந்து செயற்படத் தொடங்கினார்.

எனது கைதானது பயங்கரவாத தடைச்சட்டத்தின் கீழ் இருப்பதால், நீதிமன்றத்தினூடாக வழக்கைத் தாக்கல் செய்து, சட்டத்தரணிகளுக்கு ஊடாக வாதாடினால் என்னை விடுவிக்க முடியும் என, அமரர் அவர்கள், ஆலோசனை வழங்கியிருந்தார். அந்த காலகட்டத்தில் கொழும்பில் பிரபலமான சட்டத்தரணிகளான, குமார் பொன்னம்பலம், மோதிலால் நேரு, தவராஜா போன்றவர்களே துணிச்சலுடன், கைதாகிய தமிழ் இளைஞர்களுக்காக, இலவசமாக நீதிமன்றில் வாதாடி குறைந்த பட்ச தண்டனையூடாக, விடுதலை பெற்றுக்கொடுத்துக்கொண்டிருந்தனர். அவர்களை அணுகவும் எனது முறைப்பாட்டில் இருக்கும் சாதகமான விடயங்களை அவர்களோடு கலந்தாலோசித்து, எனது வழக்கினை



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

துரிதப்படுத்தவும். அமரர் அவர்கள் செய்த உதவிகள் பல. அவை என்றும் மறக்கத்தக்க நிகழ்வுகள் அல்ல. தேசியத்தின்பால் பற்றுக்கொண்ட சட்டவாளர்களில் அமரர் பேரின்பநாயகம் ஐயாவும் நினைவுகூரப்படவேண்டியவர். எண்பதுகளில் இவர்களது சேவைகள் கைதான பல தமிழ் இளைஞர்களுக்கு வரப்பிரசாதமாக இருந்ததை மறுக்கமுடியாது.

எனக்கான சட்டத்தரணியை அப்போதிருந்த பருத்தித்துறை நாடாளுமன்ற உறுப்பினர் துரைரட்ணம் ஐயா அவர்கள், எனது தந்தையாரோடு வல்வெட்டித்துறைக்கு சென்று, சட்டத்தரணி மோதிலால் அவர்களை ஒழுங்கு செய்த போது, மோதிலால் அவர்களோடு அமரர் பேரின்பநாயகம் ஐயாவும் இணைந்து, எனது வாக்கு மூலத்தை அடிப்படையாகக் கொண்டு, வழக்குத் தாக்கல் செய்வதற்குப் பல உதவிகள் புரிந்தமை மதிக்கத்தக்கது.

நான் மீண்டும் எனது உயர் கல்வியை தொடரவேண்டும் என்ற நற்சிந்தனையின்பால், அன்றைய பிரதம நீதியரசர் விக்னேஸ்வரன் ஐயா குறுகிய கால தண்டனையை வழங்கினார். நான் விடுதலை அடைவதற்கு அமரர் அவர்கள் பல வழிகளிலும் செயற்பட்டதை, அவரது மறைவு நாளில் நினைத்துப் பார்க்கிறேன்.

தேசப்பற்று தேசியப்பற்று நிறைந்தவர்களாக, அன்றைய சட்டவாளர்கள் அமரர் குமார் பொன்னம்பலம், அமரர் மோதிலால் நேரு, கே .வி தவராசா இவர்களுடன் அமரர் பேரின்பநாயகம் ஐயா அவர்களையும் இணைத்துப்பார்க்க முடிகிறது. பற்று நிறைந்த சட்டவாளர்களின் பின்னணிதான், இன்றும் எங்கள் நிலத்தில் தேசிய சிந்தனைகளை வலுவாக வரித்து இயங்கு நிலையில் செயற்படுவதை பார்க்க முடிகிறது.

அந்தவகையில் தம்பி மயூரனிடமும், மீரா மங்களேஸ்வரனிடமும் சமூகப்பற்றினையும் தேசியப் பற்றினையும் நான் கண்டுணர்ந்துள்ளேன். இதுமட்டுமல்ல, அன்றைய காலங்களில் எனது தந்தையாருக்கும் ஆ.ம. செல்லத்துரை வாத்தியாருக்குமிடையில் இருந்து வந்த சமூக முன்னேற்ற செயற்பாடுகள் மற்றும் தேசியம் சார்ந்த செயற்பாடுகள்தான், அதன் தொடர்ச்சியாக இன்றுவரை எமது இரண்டு குடும்பங்களும் தேசியத்தின் பால் பற்றுடன் பயணித்து வருவதற்குக் காரணமாய் அமைந்ததை எண்ணி பெருமகிழ்வு அடைகிறேன்.

அமரர்.பேரின்பநாயகம் ஐயா அவர்கள், தேசியத்திலும் எமது சமூகத்திலும் நீக்கப்படமுடியாத மானிடவாதியாகப் பதியப்படுகிறார்.

நினைவுகளுடன்

**முருகேசு கந்தவரோதயன்**

சுவிஸ்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# ❖ A Legal Voice of the Voiceless Tamilians

Mr. Selvadurai Perinpanayagam, a Senior Attorney-at- Law in our society, fondly called by us as 'Periyamama' from our childhood, a social concious humanitarian legal defender of the socially oppressed Tamil speaking people; very fluent in all the three languages, an intense lover of fine arts and aesthetics, well versed in the knowledge of the all legal procedures with chapter and verse, fully aware of each and every complicated articles in the book of law, above all a legal voice of the voiceless Tamilians, hailed from an extremely social conscious family at Vathiry in Vadamaradchy.

Actually there is a long generation gap between Mr.Perinpanayagam and myself. So I am not deserving to write about his past achievements. Anyway I feel it is my inevitable duty and responsibillty to record a few words about him, to the best of my childhood memory power.

Mr. Perinpanayagam was not only my close relative but my next door neighbour also. A beloved step brother of my mother and lovable brother-in-law of my father. He had great respect for my father but both would be behaving as close friends. He would often visit my father and behaving a friendly talk with him in fluent English. I used to be much impressed by his clear cut English pronunciation and his way of speaking. Both would be discussing for a long time about the news items of the 'Daily News' English newspaper.

I would be closely listening to their conversation and picking up lot of legal terms by heart from their talk. His cut and dried English pronunciation, from the bottom of his throat, like Mr.G.G.Ponnampalam had always been a great motivation to me, to develop my English pronunciation skills and to become a Teacher of



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

English later in my life. It had made a great impact on my mind and created a strong desire in me to learn English.

Mr.Perinpanayagam had close contacts with the leading Tamil Lawyers of his time, such as Mr.S.J.V.S.Chandrahasan, Mr.Srinivasan, Mr.Sivasithamparam, and Mr.C.V. Vivekananthan. Mr. Perinpanayagam being one of them, made a great contribution to win many political cases, filsed against the Tamil speaking people. He was an important Defence Counsel in the Trial-at-Bar case procedure against the TULF members of Parliament around 1977.

Such a wonderful personality of our Vathiry society, breathed his last on 02.03.2021 at is ripe age of 84. It is not only a great loss but also an irreparable loss for our socially oppressed and suppressed society as well as for the politically repressed Tamil speaking people of Sri Lanka.

Let us pay our ultimate salute to this great gentleman and pray for his great soul to rest in everlasting peace and bliss.

**- Ratnasabapathy Uthayasankar -**



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# ❖ இனி என்று நாம் காண்போம்!

காந்தியத்தை வளர்த்த சான்றோன்
கடும்போக்கை ஒழித்தே
ஒற்றுமையும் ஒருநாடும்
வேற்றுமைகள் இல்லாவாழ்வும்
விடியலாய் தோன்ற உழைத்த
ஹன்டி பேரின்பநாயகம் எனும்
கல்விமானை நினைவுறுத்தி
தன் மகனுக்கு பேரின்பநாயகம் எனத்
தகமையுடன் சூடி வைத்தார்
செல்லத்துரையெனும் எங்கள்
சமூகஜோதி!

சிந்தையிலே சிறப்பான கருத்தும்
எந்தவொரு மனிதரையும் ஏற்று
நட்புடனே பழகும் பண்பும்
எங்கள் அண்ணன் பேரின்பம்
ஏற்ற சிறப்பு!

சட்டத்துறையினூடே சார்ந்த நட்புக்களும்
கல்வியும், கலையும் கலந்த
காலத்தால் அழியா நட்புகளும்
என்றும் "பெரி" ஏற்ற தோழமைகள்!
இசையும் நாடகமும் இவர் விருப்புகள்
இசையோடு ராகத்துள் தன்னை அமர்த்தி
வசமாகி நின்ற ரசிகன்
இந்தியக் கலைஞர்களின் இன்னிசையும்
இதில் யேசுதாஸ் என்ற வல்லோனின்
மகா ரசிகனுமாய் வாழ்ந்தே
தன் மைத்துனனையும், புத்திரனையும்
அவர்பால் ரசிகர்களாக்கி ஏற்க வைத்தே

ஈழத்து கலைகளுக்கும், கலைஞர்களுக்கும்
நாளெல்லாம் கரம் கொடுத்து நின்றோன்
நாடக அரங்கினுள் நல் நெறிகள் காட்டி
வழிப்படுத்தி வாசல் திறந்தோன்.

ஈழத்து மெல்லிசையில் விருப்புக்
கொண்டோன்
நாடறிந்த பரராஜசிங்கம் என்னும்
மெல்லிசை முதல்வனின் நல்ல தோழன்
சில்லையூரானின் நட்புக்கும் தோளமையாளன்
நாளும் சட்ட நுணுக்கங்களை சான்றாக
வழங்கியோன்.

அமைதியாய் வாழ்வில் அரும்
பணிகள் ஆற்றி நின்றே,
எதிரியைக்கூட நண்பனாய் ஏற்று
என்றுமே கரங்கள் கொடுத்து
தகுதியை நிலைநாட்டிய
தகமைச் சான்றோன்.

எங்கள் சட்டத்தரணியாய்
என்றுமே நிலைத்து நின்றோன்
பேரின்பநாயகமாய் "பெரி" துவக்க
வாழ்ந்திட்ட நாயகனை
இனி என்று நாம்
காண்போம் இங்கு.

**கலாபூஷணம்**
**வதிரி. சி.ரவீந்திரன்**



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# ❖ நெஞ்சிருக்கும் வரை உங்கள் நினைவிருக்கும்

ஜாதி, மத, மொழி கடந்த மனிதாபிமானிகள் என்றும் நம் மரியாதைக்குரியவர்களே. அந்த வகையில் 43 ஆண்டுகளுக்கு முன் நான் சந்தித்த சட்டத்தரணி பேரின்பநாயகம், மனித நேயம் மாறாமல் செயற்பட்டதை என்னால் என்றும் மறக்கமுடியாது.

இறப்பு என்பது இயல்பானதே. ஆனாலும் சிலரின் இறப்பு, எம்மைப் பெரிதும் பாதிக்கும். அத்தகையதே சட்டத்தரணி பேரின்பநாயகம் அவர்களின் மறைவு.

1977 ஆம் ஆண்டில் இடம்பெற்ற இனக்கலவரத்தில் வடகிழகிற்கு வெளியே வாழ்ந்த தமிழர்கள் பெரிதும் பாதிக்கப்பட்டனர். அக் கலவரத்தில் கொல்லப்பட்டும், பொருட்களை இழந்தும், வீடுகளை இழந்தும் தமிழர்கள்பட்ட துன்பமும், துயரமும் சொல்லில் அடங்காதவை.

அவ்வாறு பாதிக்கப்பட்ட தமிழர்களுக்கு நீதியும், நஷ்டஈடும் கோரவேண்டிய தேவை அன்று எழுந்தது. அந்த அரிய பணியில் கழக நிறுவனர் திரு.சந்திரகாசன் ஐயாவுடன் கரம் கோர்த்து உதவிய நல்லுள்ளங்களில் சட்டத்தரணி பேரின்பநாயகம் எம்மால் மறக்கமுடியாத ஒருவராய் இருந்தார்.

பாதிக்கப்பட்ட தமிழர்களின் விபரங்களை ஆதாரங்களுடன் திரட்ட முழுமூச்சுடன் ஈடுபட்ட பேரின்பநாயகம் போன்றவர்களின் பணம் பெற்றுக்கொள்ளா பணியே, பல நூறு பாதிக்கப்பட்ட தமிழர்கள் நஷ்டஈடுபெற வழிகோலியது.

சன் சோனிக் கமிஷன் அரங்கிற்கும், தமிழினத்திற்காக உரிமைக் குரல் எழுப்பிய தமிழ் இளைஞர்கள் அடைத்துவைக்கப்பட்ட பனாகொடை இராணுவமுகாமிற்கும், திரு.சந்திரகாசன் ஐயாவுடன் பல தடவை சென்று சட்டப்பணிபுரிந்த திரு. பேரின்பநாயகம் அவர்களின் இனநலன் நாடிய கடின உழைப்பை உடனிருந்து பார்த்தவள் நான். இக் காலகட்டத்தில் ஆஸ்துமா நோயின் பாதிப்புக்குள்ளாகி இருந்தும் பனாகொட இராணுவமுகாமில் தடுத்து வைக்கப்பட்டிருந்த தமிழ் இளைஞர்களை சந்திக்க அவர் பின்வாங்கியதே இல்லை.

1983இன வன்முறையால் நான் தமிழகம் செல்ல நேரிட்டது. அப்போது எமது அமைப்பினதும், பாதிக்கப்பட்ட தமிழர்களினதும் சட்ட ஆவணங்களை அக்கறையுடன்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

பாதுகாத்து உதவிய பெருமகனே, சட்டத்தரணி பேரின்பநாயகம் அவர்கள். பிரிந்த உறவுகளை அவர்தம் சொந்தங்களுடன் தொடர்புகளை ஏற்படுத்தி குடும்பங்களை இணைப்பதற்கு இலங்கையில் எமது கழகத்திற்குப் பாலமாகச் செயற்பட்டவரே சகோதர் பேரின்பநாயகம்.

நாங்கள், இணைந்து பணியாற்றிய காலங்களில் இன்ப, துன்பங்களை கூட மறைக்காமல் என்னிடம் பரிமாறும் சகோதரனாக, உறவாக இருந்த சட்டத்தரணி பேரின்பநாயகத்தின் இழப்பு எனக்குப் பேரிழப்பாகவே உள்ளது.

தமிழகத்தில் இருந்து தாயகம் திரும்பி இலங்கை ஏதிலியர் மறுவாழ்வுக் கழகத்தை ஆரம்பித்தபோது, எமக்குப் பேருதவியாக இருந்தவர் சட்டத்தரணி பேரின்பநாயகம். கழகத்தைச் சட்டரீதியாக பதிவு செய்யும் பணியில் பங்காற்றியவர்.

தமிழ்நாட்டில் இருந்து இலங்கை திரும்பும் இலங்கை அகதிகளின் பிறப்பு, இறப்புச் சான்றுகள் பெறுவதிலும் அவர்களின் நில ஆவணங்களில் சர்ச்சை ஏற்படுமிடத்து அவற்றைத் தீர்த்து வைப்பதிலும் ஊதியம் எதிர்பாரா உழைப்பை வழங்கி உதவிய அவரது பெரும் பண்பு போற்றுதற்குரியதே.

தாயகம் திரும்பும் ஈழத்தமிழரின் மறுவாழ்வுப் பணிகளுக்காய் பல்வேறு கட்சித்தலைவர்களைப் பார்த்துப் பேசச் செல்லும் போதெல்லாம் கொழும்பில் உடன் வந்து துணையாய் நிற்பார்.

வயது முதிர்வு, உடல்நலக்கேடு அவரைத் துன்புறுத்திய போது, சட்டப்பணிகளைச் சற்று நிறுத்தி மன்னார் கழகப் பணிமனையில் எம்முடன் இணைந்து பணியாற்றிய நாட்களை இன்று எண்ணிப் பார்க்கிறேன்.

பொருளாசையற்ற சமூக அக்கறையுள்ள இவர் போன்ற நல்ல மனிதர்களே, இன்றைய இலங்கைத் தமிழ்ச் சமூகத்தின் தவிர்க்க முடியாத தேவை.

**சூர்யகுமாரி**



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

அன்பே சிவம்

# தமிழின் மீதும் சைவத்தின் மீதும் அளவு கடந்த பற்று வைத்த பண்பாளர்

அமரத்துவமடைந்த சட்டத்தரணி செல்வத்துரை பேரின்பநாயகம் அவர்களை 1990களில் தமிழர் விடுதலைக் கூட்டணிக் காரியாலயத்தில் ஹவ்லொக் ரவுணில் வசித்த காலத்தில் பழகியிருக்கின்றேன். தனது சகபாடியான சட்டத்தரணி திரு.இ.ஸ்ரீநிவாசனுடன் அடிக்கடி எனது அரசியல் குருவான மூதூர் முன்னாள் பாராளமன்ற உறுப்பினர் அமரர்.அ.தங்கத்துரையிடம் வருவார்கள். அயலிருந்த சங்கீத வித்துவான் எஸ்.கே.பரராஜசிங்கம் இவர்களோடு இணைந்து பல விடயங்களை பல மணி நேரமாக மனம்விட்டுப் பேசுவார்கள். இவர்களுடம் எம்முடன் வசித்த தலைவர் அமரர் சிவசிதம்பரம், வீ.ஆனந்தசங்கரி, மாவை சேனாதிராஜா, ஆவரங்கால் சின்னத்துரை, எஸ்.சிவபாலன் என்போருடன் பழகியவர். எனது பெரிய தந்தையார் அமரர் அமிர்தலிங்கத்தின் ட்ரையல் அட் பார் வழக்கில் பங்குகொண்ட 67க்கு மேற்பட்ட வழக்கறிஞர்களில் அமரரும் ஒருவர். பல்வேறுபட்ட கொள்கை வேறுபாடுகளிடையேயும் சட்டத்தரணி அமரர்.சி.வி.விவேகானந்தனும் அமரர் குமார் பொன்னம்பலமும் இவர்களுடன் இணைவதுண்டு.

என் மீது தனிப்பாசம் கொண்டவர். அவரது குடும்பத்தவர்களுடன் கோவில்களிலும் கலை நிகழ்வுகளிலும் திருமண வைபவங்களிலும் அடிக்கடி சந்தித்து குடும்ப நண்பர்களாகப் பழகினோம். நான் சுவிஸில் இருந்தபோது மயூரன் வந்தியத்தேவன் என்ற பெயரில் பதிவராக மிளிர்ந்தவர். அவருடன் அந்தவகையிலும் தொடர்புகளைப் பேணி வந்தேன்.

சைவ சமயத்தின் மீதும் தமிழ்மொழி மீதும் தீராத பற்றுடைய அன்னாரின் மறைவு பாரிய இழப்பாகும். அந்த வகையில் அவரது வெற்றிடத்தை எவரும் நிரப்பமுடியாது.

அன்னாரின் ஆத்மா சாந்தியடைய எல்லாம் வல்ல ஆடல்வல்லானை பிரார்த்திக்கின்றேன்.

ஓம் சாந்தி! சாந்தி!! சாந்தி!!!

என்றும் மறவாத அன்புடன்
**தங்க. முகுந்தன்**
(முன்னாள் யாழ் மாநகரசபை உறுப்பினர்)
(கிருத்தியம் பதிவர்)
மூளாய்.

# எம்மனதில் உறைந்த சித்திரம் பேரின்பநாயகம்

இனிய திரு.மங்களேஸ் மீரா தம்பதியினரை 2002ல் இருந்து அறிந்தவன் நான். அவர்களை பாரீஸ் TTN தொலைக்காட்சி முன் எடுப்பிற்காக திரு.தாசீசிஸ், மற்றும் ஜேர்மனி வரதன் என்னை இணைத்துக் கொண்டு செயற்பட்ட போது அறிமுகம் ஆனவர்கள். எனக்கு அப்போது கிடைத்த அரியபல நட்புகளில் இருவரும் அடங்குவர்.

கடந்த 20 ஆண்டுகளில் ஐரோப்பிய பல பயணங்களில் தொடர்ந்து சந்தித்தும், தொலைபேசியிலும் தொடர்ந்து நட்புப் பாராட்டும் தமிழ் நெஞ்சங்களில் முக்கியமானவர்கள்.

பலமுறை 2002ல் இருந்து இலங்கைக்குப் பயணித்திருந்தாலும், இவர்கள் இருவரின் முயற்சியால் குறும்பட விழாவில் கலந்துகொண்டு பரிசளித்து இளைய தலைமுறையினரை ஊக்கப்படுத்தும் முயற்சியின்படி நானும், என் இனிய நண்பன் தொலைக்காட்சித் தொடர் இயக்குநர் கவிதா பாரதியும் சென்று வந்ததும் மறக்கமுடியாதது.

அப்படிச் சென்றபோதுதான் மீராவின் தந்தையார் "செல்வத்துரை பேரின்பநாயகம்" அவர்களின் அறிமுகம் அனைத்து உறவினர்கள், நண்பர்களின் அறிமுகம் கிடைத்தது.

எனக்கு ஏற்கனவே நன்கு அறிந்திருந்த நட்பு வட்டத்தைப் பெருக்கிய மனிதர்களில் பேரின்பநாயகமும் முக்கியமானவர்.

சட்டத்தரணியான அவர் சமூகச் செயற்பாட்டாளர் என்பதையும் அங்கு ஊன்றி அறிந்தோம். அவரது வேகத்தையும், ஆழ்ந்த பண்பையும் நானும், பாரதியும் அடிக்கடி பேசுவது உண்டு. பல நண்பர்களை எங்களுக்கு அறிமுகப்படுத்தி மகிழ்ந்தார்.

இவருடனான சந்திப்பின்போது குட்டிமணி, ஜெகன், தங்கத்துரை ஆகியோருக்கு எதிரான வழக்கில் ஆஜரான சட்டத்தரணி என்பதை அறிந்து கொண்டேன்.

கற்றறிந்த, மக்கள் நலம் பேணும் நல்குடும்பத்துப் பிரதிநிதியாகவும், பெரும் நட்புவட்டமும் கொண்டவர் என்பதையும் அறிந்து மகிழ்ந்தேன்.

என்னையும், கவிதாபாரதியையும் அவரும்,அவரது குடும்பத்தாரும் கொண்டாடியது என் கண்களைவிட்டு மறையாத காட்சியாக இருக்கிறது.

நட்பு நிலையில் எம்மனதில் உறைந்த சித்திரமாக பேரின்பநாயகம் எப்போதும் இருப்பார்.

சமூகநோக்கோடு அன்னாரின் நினைவைப்போற்றும்
ஓவியர்
**டிராஸ்கி மருது** (இந்தியா)



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# ❖ 'மூத்தண்ணா' என்னும் வழிகாட்டி

பிறப்போர் எல்லோரும் என்றோ ஒரு நாள் இறக்கத்தான் வேண்டும் என்பது உலக நியதி. இதை நாம் உணர்ந்தாலும் கூட, உறவுகளின் இழப்பினை ஜீரணிக்க முடியாது. இருப்பினும் அவர்கள் விட்டுச் சென்ற பெறுமதியான பதிவுகள் அவர்கள் என்றுமே எம்முடன் வாழ்ந்து வருகின்றார்கள் என்பதனை உணர்த்துகின்றது.

அமரர். சட்டத்தரணி ஆ.ம.செ.பேரின்பநாயகம் அவர்களை நாம் மூத்தண்ணா என்றே அன்புடன் அழைப்போம். எம்மில் அவர் காட்டிய அன்பு, வழிகாட்டல், ஆலோசனை என்பன அளப்பரியன. எமது கிராமத்திலிருந்து முதன்முதலாக யாழ் சொன் ஜோன்ஸ் கல்லூரியில் கல்வி பயின்றவர் அவரே. அவரைத் தொடர்ந்தே அவரின் வழிகாட்டலில் நாமும் அதே கல்லூரியில் கல்வி கற்றோம். கொழும்பு, யாழ்ப்பாணம், சாவகச்சேரி ஆகிய நீதிமன்றங்களில் வாதாடியது மாத்திரமன்றி, தனது வயது முதிர்ந்த காலத்தில் கொழும்பு, மன்னார், மட்டக்களப்பு ஆகிய மாவட்டங்களுக்கு நீண்ட தூரம் பயணம் சென்று பல வழக்குகளில் வாதாடியமை வியக்கத்தககது! கூட்டங்களில் உரையாற்றுவது, கல்வித்துறைத் தெரிவு, உத்தியோகத் தெரிவு ஆகியவற்றில் அமரரின் வழிகாட்டல் எனக்குப் பேருதவியாக இருந்ததை நன்றியுடன் நினைவுகூருகின்றேன்.

அமரர் அவர்களின் பெற்றோர்கள் ஆகிய அமரர். ஆ.ம.செல்வத்துரை, அமரர்.மீனாட்சியம்மா ஆகிய இருவரும் ஆசிரியர்களாகக் கடமையாற்றி எமது மாணவர்களின் கல்வி மேம்பாட்டிற்கு உந்துசக்தியாக இருந்தமையும் நினைவுகூரப்பட வேண்டும். நான் தேவரையாளி இந்துக் கல்லூரியில் முதலாம் ஆண்டு படிக்கும் போது பள்ளிக்கு ஒழிப்பது வழக்கம். ஒருநாள் இவ்வாறு பள்ளிக்குச் செல்லாது ஒழித்து நின்ற போது பெரியையா ஆ.ம.செ. அவர்கள் எனக்குப் பிரம்பினால் அடிக்கத் தொடங்கினார். இதைக் கண்ட பெரியம்மா மீனாட்சியம்மா ரீச்சர் ஓடிவந்து என்னைக் காவல் காத்து எனக்காக பிரம்பினால் செம அடி வாங்கிக்கட்டியது இன்றும் மறக்க முடியாது. பெரியம்மா வாங்கிய செம அடியினால்தான் நான் பள்ளிக்கு ஒழுங்காகச் சென்று கல்வியில் உயர் நிலையை அடைந்தேன் என்றால் அது மிகையாகாது.

அமரர். சட்டத்தரணி பேரின்பநாயகம் அவர்களின் ஆன்மா பாசங்களிலிருந்து நீங்கி இறைவனின் திருப்பாதங்களில் பேரின்பப் பெருவாழ்வு வாழவும், ஆத்மா சாந்தியடையவும் எல்லாம்வல்ல பூவற்கரை விநாயகனை பிரார்த்திக்கின்றோம்.

**சோ.கோகுலதாசன்** M.Sc
(ஓய்வுநிலை பொதுமுகாமையாளர், முன்னாள் தலைவர், இலங்கை பனை அபிவிருத்திச்சபை, அகில இலங்கை சமாதான நீதவான்)



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# පෙරි මාමා

එනකොට මට තිහයි. දීර්ඝ කාලයක් ඉන්දියාවේ ගතකරලා ලංකාවට ආව අලුත. ඔය කාලේ දවසක් මට බම්බලපිටියේ ග්‍රීන්ලන්ඩ්ස් හෝටලයේදී අහම්බෙන් වාගේ ගුවන් විදුලි සංස්ථාවේ ද්‍රවිඩ සේවයේ සංගීත පාලකව සිටි සින්නතම්බි කන්දයියා පරරාජසිංහම් මහත්තයාව හම්බ වෙනවා. ඔහු හරීම අහිංසක තනිකඩයෙක්. පදිංචි වෙලා හිටියේ තිඹිරිගස්යායේ තැනක. කල් නොයවාම මම ඔහු යටතේ කර්නාටක සංගීතය ප්‍රගුණ කරන්නට පටන් ගත්තා. කෙටි කලක් ගතවෙත්ම මම මගේ ගුරුතුමන්ගේ නිවසේ ස්ථිර පදිංචිකාරයෙක් වුනා. සිල්ලයියූර් සෙල්වරාජන්, කාවලූර් රාජදෙරේ, අමරදේව, රවිබන්ධු, පී.වී. නන්දසිරි වැනි සාහිත්‍යධරයින්, සංගීතඥයින්, රචකයින්, ගුවන්විදුලි ශිල්පීන් ආදී සුවිශාල පරාසයක පිරිසක් ඔය ගෙදරට නිතර ආවා ගියා. ඔවුන්ගේ ලෙන්ගතු ඇසුරේ, දිනෙන් දිනම මගේ කලා විෂය පථය ප්‍රසාරණය වෙන්නට පටන් ගත්තා. අපේ ගෙදරට අල්ලපු ගෙදර ටී.යූ.එල්.එෆ්. පිහිටා කාර්යාලය තිබුනා. ආර් සම්බන්ධන්, වී. ආනන්දසංගරී, අවාසනාවන්ත ලෙස අකල් මරණයකට ගොදුරුවුනු එවක පාර්ලිමේන්තු මන්ත්‍රී එස් තංගදුරේ මහත්තයා ආදීන් දිනපතාම වාගේ ඔය කාර්යාලට ගොඩවුනා. ඉස්සරහා කාමරයේ රොද බඳින කට්ටිය කෙස් පැලෙන තර්ක විතර්ක ඉදිරිපත් කළා. ඔතෙන්ට නිතර ආව ගිය, දේශපාලඥයින් නොවන නීතිඥ මහත්තරු කීප පොලක්ද හිටියා. ඉන් දෙන්නෙක් මගේ සිත් ගත්තා. එක්කෙනෙක් කීර්තිමත් රාජනීතිඥ රෙංගනාදන්ගේ පුත්‍රයා ශ්‍රීනිවාසන්. අනිත් එක්කෙනා ඉතා කරුණාවන්ත පෙරිම්පනායගම් මහත්තයා. වයසින් ඔවුනට වඩා බෙහෙවින් බාල මා, සමාජ තරාතිරම නොසලකා මොවුන් සියළු දෙනාව ඇමතුවේ මාමා කියලා. මේ සියළුම දෙනා කොන්දේසි විරහිතව මට ලෙන්ගතුකම් පෑවා. ඇත්තම කියන්ඩ මේ අය මට සැලකුවේ තමන්ගේම දරුවෙකුට වාගේ.

මේ පිරිස එකතු වුනාම කළ කතාබහ බරසාරයි. සමහර සංවාද දේශපාලනිකයි, සමහර ඒවා බහුශ්‍රතයි. තවත් ඒවා දර්ශනිකයි. එල්.ටී.ටී.ඊ. සහ හමුදාව අතර ගැටුම පිළිබඳව මධ්‍යස්ථව විමසන්නට මං පුරුදු වුනේ මේ අයගේ කථා බහට ඇහුම්කන් දීලා. ශ්‍රීනිවාසන් සහ පෙරිම්පනායගම් මාමලා නිතර පහේ මගේ ගුරුතුමන්ගේ නිවසටත් ගොඩවුනා. දවසක් ශ්‍රීනි සහ පෙරී මාමාලා සමග මම ජින්තුපිටිය කෝවිලේ පැවැත්වූ ත්‍යාගරාජා ආරාධනා උත්සවයට සහභාගිවෙන්නට ගියා. එද තමයි මම දැනගත්තේ නීතිඥයින් වුනාට මොවුන්ගේ සංගීත ඥානය ඉතා ඉහල මට්ටමක තිබෙන වග. එතැන් සිට අප හමුවූ සෑම අවස්ථාවකම කර්ණාටක සංගීතයේ ඉතිහාසය, විකාශය හා සාහිත්‍යය පිළිබඳව මා දැනුවත් කරන ප්‍රධාන භූමිකාව රගපෑ චරිත දෙකක් ශ්‍රීනි සහ පෙරී මාමාලා. සත්තකින්ම ඔවුන්ගේ ඇසුර මගේ කර්ණාටක සංගීත ශිෂ්‍ය ජීවිතය වෙනස්ම මානයකට ඔසවා තැබුවා.

සීඩී තාක්ෂණය ලෝකයට එන්නට පෙර එකල අපි ඇහුවේ කැසට් පටවල පටිගත කළ ගීත. මෙතැනදී මට රස කථාවක් මතක් වෙනවා. පරරාජසිංහම් මාස්ටර්ගේ ප්‍රධාන ගෝලයෙක් බී එච් අබ්දුල් හමීඩ්. බහුතරය නොදන්නවාට ඒ ආර් රහ්මාන්ගේ සංගීත ජීවිතය ආලෝකමත් කරන්නට විශාල පිටුබලයක් වූ චරිතයක් ලෙස අදටත් රහ්මාන්ගේ ගෞරවය දිනා සිටින චරිතයයි අබ්දුල් හමීඩ් අන්නා. දවසක් අබ්දුල් අන්නා අපේ ගෙදර ආවා. ඒ වෙලාවේ එතන සිල්ලයියූර් සෙල්වරාජන් මාමාත් හිටියා. රහ්මාන් ගැන කෙටි හැඳින්වීමකින් පස්සේ චින්න චින්න ආසයි ගීතය වාදනය කළා. එනකොට මේ ගීතය සහිත රෝජා චිත්‍රපටිය තිරගත වී නැහැ. රහ්මාන් ගීතය පටිගත කිරීමෙන් පස්සේ ඉස්සරවෙලාම අහන්න දුන්නේ අබ්දුල් අන්නාට. ඔහුගෙන් ගීතය පිළිබඳව ගුණ දෙස් අහගන්න. අපි මේ ගීතයට වහ වැටුනා. පරරාජසිංහම් මහත්තයා ශ්‍රීනි සහ පෙරී දෙපලට කථා කරලා කිව්වා එද හවසට කොහොම හරි අපේ ගෙදර එන්න කියලා. ජෝඩුවම ආවා. ගීතය වාදනය කළා. මට මතක විදියට මධූ විතක් හමාර වෙනතුරු විසි සැරයක් විතර රිවයින් කරමින් ගීතය ඇහුවා. හරියටම ඊට දින කිහිපයකට පස්සේ එකල ම විසින් ශ්‍රී ලංකා ගුවන් විදුලි සංස්ථාවට නිශ්පාදනය කළ **නාද සිත්තම්** සහ පරරාජසිංහම් මාස්ටර් ඉදිරිපත් කළ **ඔලි ඔවියම්** වැඩසටහන් වල අප රහ්මාන්ගේ අවසරයෙන් තොරවම චින්න චින්න ආසයි ගීතය වාදනය කළා.

හරිහරන් සහ ලෙස්ලි ලුවිස් එකතුවෙන් නිමවුනු කොලෝනියල් කසින්ස්ලාගේ ක්‍රිෂ්ණා නී බෙගනි බාරෝ ගීතය ඇතුළත් තැටිය [illegible] හොයාගත්තේ පෙරී මාමා. අපේ ගෙදරට කට්ටිය රොදබැඳුනු දවසක අපි මේ ගීත සමුච්චය ඇහුවා. ඒ තැටියේ අඩංගු ගීත එකින් එක අයිති අභවල් රාගයට කියලා මුලින්ම කිව්වේ පෙරී මාමා. පරරාජසිංහම් මාස්ටරුත් ශ්‍රීනි මාමාත් ස්ථිර කළා.

මා නම් හිතන්නේ නැහැ පෙරී මාමා කවමදාකවත් සිංහල දෙමළ කියලා වෙනසක් දැනගෙන හිටපු චරිතයක් කියලා. කළු පූලියට ඉස්සරවෙලා 1980 ගනන් වල මුල පී වී නන්දසිරි මහත්තයා යාපනයේ රාමනාදන් සංගීත විද්‍යාලයට ගිය වෙලේ ගායනා කළ ගීත, ඒවාට පාදක රාග පෙරී මාමාට මතක තිබුනා. ඔහු වයස, තරාතිරම නොබලා මිනිස්සුන්ට උදව් උපකාර කළා. අඹ මල් රේණුවක ප්‍රතිඋපකාරයක් බලාපොරොත්තු නොවීම, යාළු මිත්‍රයින් වෙනුවෙන් ලියූ දිව්රුම් පෙත්සම්, අන්තිම කැමති පත්‍ර ආදී නීති ලිපි ලේඛන ගනන් කරන්නට බැරි තරම්. ඔහු සීමා රහිතව අනායෙන්ට උදව් උපකාර කළාට කිසිම දවසක තමන්ගේ දුෂ්කරතා එළිදරව් කොට කිසිම කෙනෙකුට අතපෑවේ නැහැ. ඔහු ඉතා නිහතමානී, කරුණාවන්ත, අදීන චරිතයක්.

දවසක් ඔහු කොළඹ අතහැර නැවත තම පරම්පරාවට අයිති යාපනයේ නිවසේ පදිංචියට යන බව පැවසුවා. ඒ ප්‍රවෘත්තියම මා කම්පාවට පත්කළා. අපි දුරස්ථ වුනේ එහෙම. එහෙත් මා හැකි සෑම විටකම දුරකථනයෙන් ඔහු අම්මා සුවදුක් විමසුවා. ඒ සෑම විටකම පාහේ ඔහු මගේ ජීවිතයේ රසතැන් අසා උද්දමයට පත්වුනා. ඔහු ඒ තරම්ම මට ආදරය කළා. කොන්දේසි විරහිතව සෙනෙහෙ පෑවා. අවුරුදු අසූ ගනනක පූර්ණ ජීවිතයක් අත්විඳ අවසන් ගමන් ගියත් ඔහුගේ වියෝව දරාගන්නට අපහසුයි. ඒ ඔහු පිළිබඳව මතකය ඒ තරම්ම සුන්දර, ලෙන්ගතු එකක් නිසා. ඔහුගේ දුක සැප විමසා එන්නට යාපනයට යන්නට සූදානම්ව සිටි සතියේම දවසක ඔහු අප හැරයාම මොන තරම් දෛවෝපගතද? ආදරණීය පෙරී මාමාට නිවන් සුව අත්වේවා.

විෂ්ණු වාසු

அமரர் ஆ.ம.செலவத்துரை அவர்கள் எமக்கு ஆற்றிய மேதகு சேவைகளைத் தொடர்ந்து எமக்கு ஒரு சட்டத்தரணி இல்லையே என்ற கவலையை 1971ல் இரத்தினபுரி பாராளமன்ற உறுப்பினர் சரத முத்தட்டுவேகமவுடன சேர்ந்து யாழ்ப்பாணம் உயர் நீதிமன்றத்தில் வழக்காடி மாறாம்புலத்தவர்களுக்கு வெற்றி பெற்றுத்தந்தவர் ஆ.ம.செ.பேரின்பநாயகம் ஆவார். அன்னாரை இழந்து தவிக்கும் எம் உறவுகளுக்கு துயரம் கலந்த அனுதாபங்கள்.

**வையாபுரி வேலாயுதம்**
மாறாம்புலம்
(முகநூலில்)

இவர் மிகப் பெரிய சங்கீத ரசிகர் மட்டுமல்ல. இராகங்களையும் அறிந்து வைத்துள்ளார். அந்தவகையில் நானும் பெரியப்பாவிடமிருந்து எமது நிறுவனத்தின் தேவைகருதி சென்றிருந்த வேளையில் அத்தருணத்தில் எந்தவிதமறுப்புமின்றி எனக்காக கொழும்பில் பல கடைகளில் வலம் வந்து எமக்கான இசைக்கருவிகளை பெற்றுத்தந்த தருணம் உண்மையில் என்னை மெய்சிலிர்க்கவைத்தது! இப்படியான இழப்புக்களை நாம் எப்படி நிவர்த்தி செய்யபோகின்றோம்? எமது ஆழ்ந்த அனுதாபங்களையும் ஆறுதலையும் தெரிவித்துக்கொள்கின்றோம்.

**லோகநாதன் விஜேந்திரன்**
(முகநூலில்)



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# தந்தை செல்வா பாசறையில் தமிழ் தேசியத்திற்கு தம்மை அர்ப்பணித்த உத்தமர்

சட்டத்தரணி செல்வத்துரை பேரின்பநாயகம் அவர்களின் மறைவு தமிழ் மக்களுக்கும், குறிப்பாக செல்வநாயகம் நினைவு அறக்கட்டளைக்கும் ஒரு பாரிய இழப்பாகும். சட்டத்துறையில் கண்ணியமும் அப்பழுக்கற்ற வாழ்வு நெறியையும் கொண்ட ஒருவரை இழந்தமை இன்றைய சூழ்நிலையில் மிகவும் வருத்தப்படக் கூடியதொன்றாகும்.

ஈழத்துக் காந்தி மூதறிஞர் தந்தை செல்வாவின் கொள்கைகளினால் ஈர்க்கப்பட்டு, தமிழ் மக்கள் விடுதலைப் போரில் தம்மை இணைத்துக்கொண்டு, தொடர்ச்சியாக பல இழப்புக்களை சந்தித்த வண்ணம் தம் கடமைகளை மிகுந்த அமைதியாக நிறைவேற்றிய ஒரு கனவானின் வெற்றிடம் இலகுவில் ஈடுசெய்யக்கூடியதன்று. தந்தையின் மறைவுக்கு பின்னர் தந்தையின் தனையன் மதிப்பார்ந்த திரு சா.செ. சந்திரகாசனின் வழிகாட்டுதலை ஏற்று செல்வநாயகம் நினைவு அறக்கட்டளையின் தாபக அறங்காவலராக இறுதிவரை செயற்பட்டதன் மூலம், பல நல்ல பணிகளை ஆற்றி தந்தையின் இலட்சிய கனவுகளை நனவாக்க உழைத்து வந்தார்.

அமரர் பேரின்பநாயகம், 1975 ஆம் ஆண்டு, வரலாற்று பிரசித்தி பெற்ற வழக்காகிய திரு.அப்பாப்பிள்ளை அமிர்தலிங்கம் அவர்களுக்கு எதிராக இலங்கை அரசாங்கத்தினால் தொடரப்பட்ட டரயல்-அற்-பார் வழக்கில் தந்தை செல்வா தலைமையில் பல இராணி வழக்கறிஞர்கள் உட்பட 65க்கு மேற்பட்ட பிரபல சட்டவாதிகள் வாதாடியபொழுது, அதில் தம்மை முழுமையாக ஈடுபடுத்தி இரவு பகலாக உழைத்தார். 1980களில் மூத்த சட்டத்தரணி திரு.சந்திரகாசனுடன் இணைந்து தமிழ் மக்களுக்கெதிரான மனித உரிமை மீறல்கள் தொடர்பாக உலகளவில் பல மனித உரிமை காப்பவர்களுடன் இணைந்து ஆற்றிய பணிகள் மகத்தானது.

அமரர் பேரின்பநாயகம் அவர்கள் மறைவினால் துயருற்றிருக்கும் அன்னாரது அன்புத் துணைவியார் திருமதி.சந்திரலேகா அவர்தம் அருமை பிள்ளைகளாகிய மீரா மங்களேஸ்வரன், மதுரா முரளிபாரதி, மயூரன் மற்றும் மருமக்கள் பேரப்பிள்ளைகள் அனைவருக்கும் எமது ஆறுதலை கூறி அன்னாரின் ஆன்மா இறைவன் திருப்பாதங்களில் என்றும் நிலைபெற்று, பேரானந்தம் அடைந்து இன்புற்றிருக்க இறைஞ்சுகின்றோம்.

நிறுவனர்/அறங்காவலர்கள்/ஊழியர்கள்
செல்வநாயகம் நினைவு அறக்கட்டளை



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# பெரி மாமா

இந்தியாவில் நீண்ட காலம்தங்கியிருந்த பின் நான் இலங்கைக்கு வந்த புதிதில், பம்பலப்பிட்டியில் கிறீன்லண்ட் ஹோட்டலில் சங்கீத வித்துவான் அமரர்.சின்னத்தம்பி கந்தையா பரராஜசிங்கம் அவர்களை தற்செயலாகச் சந்தித்தேன். அவருடன் பழகி பார்த்த பின்னர் தான் அவர் மிகச் சிறந்த மனிதர் மட்டுமல்ல மிகச் சிறந்த ஆளுமையாகவும் விளங்கினார் என்பதைப் புரிந்துகொண்டேன். இங்கிருந்த காலத்திலேயே நான் அவரிடம் கர்நாடக சங்கீதம் கற்க சென்றேன். குறுகிய காலத்திலேயே எனது குருவின் வீட்டில் தங்கியிருக்க நேரிட்டது. அப்போது, சில்லையூர் செல்வராஜன், காவலூர் ராஜதுரை, அமரதேவ, ரவிபந்து, பி.வி.நந்தசிறி போன்ற இலக்கிய அறிஞர்கள், சங்கீத அறிஞர்கள், நாடகக் கலைஞர்கள், வானொலிக் கலைஞர்கள் போன்றோர் எனது குருவின் வீட்டிற்கு அடிக்கடி வந்து செல்வதுண்டு. இதனால் அவர்களுடனான எனது நட்பு வட்டம் இன்னும் விஸ்தரித்துக் கொண்டே சென்றது.

எமது வீட்டிற்கு பக்கத்து வீடு அந்தக் காலத்தில் தமிழர் விடுதலைக் கூட்டணியின் அலுவலகமாக இருந்தது. திரு.இ.சம்பந்தன், திரு.வீ.ஆனந்தசங்கரி, அமரர் எ.தங்கதுரை போன்ற அரசியல் புள்ளிகள் அக்காரியாலயத்திற்கு வருவார்கள். இப்படியான காலகட்டத்தில் அங்கு நான் தங்கியிருந்த வேளையில் முன் அறைகளில் தர்க்க, விவாதங்கள் அடிக்கடி நடப்பதுண்டு. அப்படியான விவாதங்களில் என்னை இருவர் பெரிதும் ஈர்த்தனர். ஒருவர் ஸ்ரீநிவாசன், மற்றையவர் பேரின்பநாயகம் அவர்கள்.

அவர்களை விட வயதில் இளையவனான என்னையும் தங்களுடன் இணைத்து இவர்கள் சம்பாசனைகள் செய்வதுண்டு. இவர்கள் இருவரையும் நான் மாமா என்று தான் அழைப்பேன். என்னை தமது பிள்ளை போன்ற கரிசனையுடன் பார்த்தார்கள். இவர்களின் குழுக்கள் ஒன்று சேரும் போது அவர்களின் உரையாடல் மற்றும் சம்பாசனை என்ன விடயம் பற்றி பேசுகிறார்களோ அந்த விடயம் குறித்து தீவிரமாகக் காணப்படும். இவர்களின் உரையாடல்கள் பெரும்பாலும், அரசியல் சார்ந்தும், முதலாளித்துவம் சார்ந்தும், தத்துவங்கள் சார்ந்தும் காணப்பட்டன. உண்மையில் இவர்களின் உரையாடல் வாயிலாகவே நான் எல்.ரி.ரி.ஈ குறித்து அதிகம் அறிந்தேன் எனவும் கூறலாம்.

ஸ்ரீநிவாசன் மாமாவும், பெரி மாமாவும் எனது குருவைச் சந்திக்கவும் அடிக்கடி அவரின் வீட்டிற்கு வருவதுண்டு.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

ஒருமுறை நான் பெரி மாமாவுடனும், ஸ்ரீநி மாமாவுடனும் ஜிந்துப்பிட்டி கோயிலில் தியாகராஜர் உற்சவத்திற்கு சென்றேன். இவர்கள் சட்டத்தரணிகளாக இருந்த போதிலும், சங்கீதத்தில் எந்தளவு ஆர்வம் கொண்டவர்கள் என்று அப்போதுதான் தெரிந்துகொண்டேன். உண்மையில் பெரி மாமாவுடன் அந்த நிகழ்வில் கலந்து கொண்டமை எனக்கு மறக்க முடியாத நினைவாக அமைந்தது

அன்றிலிர்ந்து நாங்கள் எப்போது சந்தித்தாலும் கர்நாடக சங்கீதம் குறித்த உரையாடல்களிலும் ஈடுபடுவோம். என்னுடைய சங்கீத வாழ்வை வேறு மார்க்கத்திற்குக் கொண்டு சென்றதில் பெரி மாமாவிற்கு அனேக பங்குண்டு எனலாம். சிடி தொழில்நுட்பம் உலகிற்கு வருவதற்கு முன்னர் நாமெல்லாம் பாடல்களை கசட்டுகளில் பதிவு செய்தே கேட்பதுண்டு. இவ்விடத்தில் எனக்கு ஒரு சுவாரஸ்யமான கதை நினைவில் வருகிறது. பரராஜசிங்கம் மாஸ்டரது, மிக பிரதான சீடர்களில் ஒருவர் அறிவிப்பாளர் அப்துல் ஹமீத் அவர்கள். உண்மையில் ஏ.ஆர்.ரகுமானின் சங்கீத வாழ்வு ஆரம்பிப்பதற்கு முன்னரே அவர் பற்றிய புரிதல் அப்துல் ஹமீத் அண்ணாவுக்கு இருந்தது. ஒருமுறை அப்துல் ஹமீத் அண்ணா அவர்கள் எமது வீட்டிற்கு வந்திருந்தார். அவ்வேளை சில்லையூர் செல்வராஜன் மாமாவும் கூட இருந்தார். ரகுமானது சின்ன சின்ன ஆசை பாடலை எமக்குப் போட்டுக் காட்டினார். ரகுமான் பாடல்களைப் பதிவு செய்த பின்னர் அப்துல் ஹமீத் அண்ணாவிடம் கேட்கக் கொடுத்தார். அண்ணா அதை எமக்கும் போட்டுக் காட்டினார். பரராஜசிங்கம் மாஸ்டர் உடனே சிறினி மாமாவுக்கும், பெரி மாமாவுக்கும் தொலைபேசி எடுத்து எப்படியாவது மாலை நேரம் தனது வீட்டிற்கு வரச் சொல்லிப் பணித்தார். இருவரும் ஒன்றாக வீட்டிற்கு வந்தனர். பாடலைப் போட்டுக் காட்டினோம். எனக்கு நினைவிருக்கும் பட்சத்தில் பெரி மாமா அப்பாடலைத் திரும்பத் திரும்பக் கேட்டுக் கொண்டிருந்தார்.

இச்சம்பவம் நடந்து சில தினங்களிற்குப் பின்னர் இலங்கை ஒலிபரப்புக் கூட்டுத்தாபனத்தில் பரராஜசிங்கம் மாஸ்டர் தயாரித்து வழங்கிய ஒலி ஓவியம் நிகழ்விலும் இப்பாடலை ஒலிபரப்பு செய்தமைக் குறிப்பிடத்தக்கது. ஹரிஹரன், லெஸ்லி லூயிஸ் ஆகியோர் ஒன்றாக இணைந்து பாடிய «கிருஸ்ணா நீ பேகனே வரோ» பாடலை பெரிமாமாவே எமக்கு அறிமுகம் செய்தார். அவர் அடிக்கடி இந்தப் பாடலைக் கேட்பதுண்டு. நாமும் ஒரு முறை எமது வீட்டில் பெரிமாமாவுடன் இணைந்து இப்பாடலைக் கேட்டோம். இந்தப் பாடலில் வரும் அத்தனை இராகங்களையும் பெரி மாமாவே முதலில் கூறி பரராஜசிங்கம் மாஸ்டரையும், ஸ்ரீநி மாமாவையும் ஆச்சரியப்படுத்தினார். பெரிமாமா இராகங்களைக் கண்டு பிடிப்பதில் வல்லவர். அது



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

அவருக்கே உரிய தனித்துவமாகும்.

பெரிமாமா தமிழரா? அல்லது சிங்களவரா? எனக் கண்டுப்பிடிப்பது மிகக் கடினம். காரணம் அந்தளவிற்கு அவர் இரண்டு மொழிகளிலும் தேர்ச்சி பெற்றவர். கறுப்பு ஜூலைக்கு முதல் 1980களில் பீ.வீ. நந்தசிறி அவர்கள் யாழ்ப்பாணம் ராமநாதன் சங்கீத கல்லூரிக்கு சென்றிருந்த போது அங்கு அவர் பாடிய பாடல்கள் பெரிமாமாவிற்கு நன்றாக நினைவில் இருந்தது. பெரிமாமா வயது வித்தியாசம் பாராது. அனைவருக்கும் உதவி செய்கின்ற ஒருவர். தவிர தான் உதவி செய்கிறேன் என்பதற்காக அவர் யாருக்கும் பிரதி உபகாரம் பாராது தன்னால் முடிந்ததைச் செய்வார்.

தனது சொந்த இடமான யாழ்ப்பாணத்திற்கு சென்று குடியேறப் போவதாக பெரிமாமா என்னிடம் வந்து கூறினார் நாம் இருவரும் இதனால் தான் பிரிந்தோம் என்றே கூறலாம். அவர் எங்கு சென்றாலும் என்னையும் அழைத்துக் செல்வார். தொலைபேசி அழைப்பு ஏற்படுத்தி நாம் ஒன்றாக எல்லா இடமும் சென்று வந்தோம். என் வாழ்வில் மறக்க முடியாத ஒருவர் பெரிமாமா. அவர் அந்தளாவிற்கு என்னில் அன்பும், அக்கறையும் கொண்டிருந்தார்.

அவர் ஒரு பூரணமான வாழ்வை வாழ்ந்து எம்மை எல்லாம் விட்டுசென்றிருக்கிறார். அவரை ஒருமுறையாவது நான் பார்த்திருக்க வேண்டும். அவரது இறுதிச் சடங்கில் கலந்திருக்க வேண்டும். ஆனால் முடியாமல் போய் விட்டது எனது விதி. எனது விருப்பிற்குரிய பெரி மாமாவின் ஆத்மா சாந்தியடையட்டும்.

**விஷ்ணு வாசு**

(அமரர் பேரின்பநாயகம் அவர்களின் நெருங்கிய இசைத்துறை நண்பர் விஷ்ணு வாசு என்பரால் சிங்கள மொழியில் எழுதப்பட்ட கட்டுரையின் தமிழ் வடிவம்).



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## ❖ என்னால் மறக்கமுடியுமா என் அருமைப் பாட்டாவை

பாட்டா என்று சொன்னாலே பாசத்துடன் அள்ளி அரவணைக்கும் என் அன்புப் பாட்டாவைக் காணவில்லை. காணாமல் தவிக்கும் எனது மனது எப்போது காணும் இனி என் பாட்டாவை.

வீட்டில் காணும் எனது விளையாட்டுப் பொருட்களிலும் அதிலும் எனக்குப் பிடித்த LEGO விளையாட்டுப் பொருளைப் பார்க்கும்போது பாட்டாவே தெரிகிறார். அவற்றை அசைக்கும்போது குலுங்கும் ஒலி யில் என்னை "தம்பி... தம்பி..." என அழைப்பதுபோல் கேட்கிறது. என் கன்னங்களில் கண்ணீர் வழிகிறது.

நாம் கொழும்பிலிருந்து யாழ்ப்பாணத்திற்கு வந்தபின்னர், ஒவ்வொரு தடவையும் தன் வேலைக்காக பாட்டா கொழும்பு சென்று திரும்பும் நாள் அதிகாலை வேளையில் அம்மாவின் தொலைபேசிச் சத்தம் கேட்கும்போது நானும் தங்கையும் அம்மாவுடன் வாசலை நோக்கி ஓடுவோம். அங்கே எம்மை ஆவலுடன் வரவேற்பார். ஒரு கையில் தனது ஆடைப்பெட்டியும் அத்துடன் ஒரு பெரிய கடதாசிப் பெட்டியும் எப்போதும் கொண்டு வருவார். நாம் அதை அம்மாவுடன் சேர்ந்து வீட்டுக்குள்ளே கொண்டு வரும் போது பயணக்களைப்பையும் மறந்த அந்த மனதிருப்தியான புன்சிரிப்பை எங்கே காண்போம்.

உள்ளே வந்தவுடன், பாட்டாவே பெட்டியைத் திறந்து அவற்றுள் இருக்கும் விளையாட்டுப் பொருட்கள், ஆடைகள், விலையுயர்ந்த இந்திய பிஸ்கட் வகைகள் மற்றும் புத்தகங்கள் எல்லாம் எடுத்துத் தந்துவிட்டுத்தான் அம்மாவிடம் "சின்ராசு **Coffee Please**" எனக் கேட்பார். அந்த அழைப்பில் அவரிடம் ஒரு திருப்தியைக் காணலாம். அது எனது பேரக்குழந்தைகளுக்கு அவர்கள் விரும்பியதை கொண்டு ஓடிவந்து கொடுத்துவிட்டேன் என்பதே.


மாலை வேளையில் முற்றத்தில் நாம் விளையாடும்போது மம்மியின் வீட்டு அத்திவாரத்தைச் சுற்றித் தானும் எம்முடன் விளையாடுவதுபோல காலாற நடந்து அந்த முன் அத்திவாரத்திலிருந்து எம்மை இரசிக்கும் முகம் எங்கே பாட்டா... எனத் தேடுகிறேன்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

பாட்டியும் நாங்களும் தனிமையில் வாடுகிறோம் தாங்கமுடியவிலை உங்கள் பேரிழப்பை.

உங்கள் ஊக்கிவிப்பால் படம் வரையும் திறன் கொண்டேன். இப்போது உங்கள் திருவுருவை வரைந்து காணிக்கை ஆக்குகின்றேன் பாட்டா....




உங்கள் அன்புப் பேரன்

**மு. அபராஜிதன்**

## ❖ எனது பாட்டா

எனது பாட்டா கொழும்பில் லோயராக இருந்தார். அவர் என்னில் மிகுந்த பாசம். நானும் அவரில் மிகுந்த பாசம். நான் பாட்டாவிற்கு சாப்பாடு ஊட்டுவேன். மருந்து பருக்குவேன். அவருக்கு நடனம் ஆடிக் காட்டுவேன்.

பேரப்பிள்ளைகளில் அளவு கடந்த பாசத்தை நமக்கு விளையாட்டுப் பொருட்கள், சாப்பாடுகள் உடைகள், விதவிதமான புத்தகங்கள் வாங்கித் தருவதில் காட்டுவார். இப் பொருட்களைப் பார்க்கும் போதெல்லாம் எங்கள் பாட்டா தெரிகிறார்.

அவர் எம்முடனே இருப்பதாக உணர்கின்றோம்.

உங்கள் ஆருயிர்ப் பேத்தி

**மு. தாருஹாசினி**



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# ❖ என் அப்பா என் தோழன்

தந்தை மகற்காற்றும் நன்றி அவையத்து முந்தி இருப்பச் செயல் என்ற வள்ளுவர் வாக்குக்கிணைய எங்கள் மூவருக்கும் நல்ல கல்வியையும் ஏனைய விழுமியங்களையும் தந்து அகமகிழ்ந்தவர் எங்கள் அப்பா. தன்னுடைய கனவுகளை எங்கள் மேல் சுமத்தாமல் நாம் எதனை விரும்பினோமோ அதன் வழியே எம்மை செல்வதற்கும் எமக்கு நல்ல கடந்தகாலத்தையும் தந்து எதிர்காலத்தில் எப்படி இருக்கவேண்டும் எனவும் வாழ்ந்துகாட்டியவர் எங்கள் தந்தை.

எங்களுடைய பாடசாலைக் கல்விக் காலங்களில் பெரும்பாலும் அப்பா எம்முடன் இல்லாமல் தலைநகரில் தொழில்நிமித்தம் தங்கியிருந்தாலும் எம் கல்வியில் என்றைக்கும் அக்கறையாக இருந்ததுடன் எமக்கு அப்போது தேவைப்பட்ட கற்றல் உபகரணங்களையும், ஏனைய பொருட்களையும் அன்றைய நாட்டு சூழ்நிலைகளிலும் காலக்கிரமத்தில் கிடைக்க உதவி செய்தார். அப்பா எமக்குக் கற்றுக்கொடுத்த மிகமுக்கியமான விடயம் தன்னம்பிக்கையும் எந்த பிரச்சனைக்கும் சோர்வடையாமல் அதனை நிவர்த்தி செய்வதுமாகும். கொழும்பிற்கு நாம் சென்ற காலத்தில் தனியாகச் சென்று எம் சம்பந்தப்பட்ட வேலைகளை செய்யச் சொல்லுவார். அதற்கான வழிகளை மட்டும் எமக்குச் சொல்லித்தருவார். ஏதாவது தூர இடத்துக்குப் போவது என்றால் கூட தனியாகப் போய்ப் பழகுங்கள் என எம்மை வழிநடத்தியவர். இது பிற்காலத்தில் எந்தவொரு வேலையையும் எங்கும் செய்யும் ஆற்றலை எமக்குப் பழக்கியது அதாவது இன்னொருவரில் எதற்கும் தங்கியிருக்காமல் நாமே நம் தேவைகளை பூர்த்தி செய்வது.

நான் தோளுக்கு மேல் வளரமுன்னரே என்னைத் தன் தோழனாகப் பாவித்துப் பழகத்தொடங்கினார். நாம் இருவரும் பேசிக்கொண்டிருப்பதை எம்மை தெரியாத மூன்றாம் நபர் ஒருவர் அவதானித்தால் நாங்கள் தந்தை, மகன் என நம்பவே மாட்டார்கள். ஏனெனில் நாம் நண்பர்கள் போலவே எப்போதும் பேசிக்கொள்வோம். அதனால் நான் அவருடனும் அவர் என்னுடனும் சிலவேளைகளில் முரண்படுவதும் உண்டு.

அப்பா எனக்குக் கற்றுத்தந்த முக்கியமான பாடம் சிந்தனைமொழி ஆகும். எந்தவிடயத்தை என்னமொழியில் நாம் பேசவோ அல்லது எழுதவோ விளையும் போது அந்த மொழியில் சிந்தித்து எழுதவோ பேசவோ செய்வதுதான் இலகு என்பார். இதனை அவர் தன் வாழ்க்கையிலும் பின்பற்றினார். சட்ட



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

ஆவணங்களை அவருக்கு நானோ அல்லது அக்காவோ தட்டச்சு செய்துகொடுக்கும் போது அவற்றினை அவர் ஆங்கிலத்தில் மிகச்சரளமாகச் சொல்லுவார், சிலவேளைகளில் அவரின் வேகத்துக்கு எம்மால் ஈடுகொடுக்கமுடியாமல் இருந்தது. அத்துடன் கொழும்பில் நடந்த பெரும்பாலான நடன, சங்கீத, ஏனைய வாத்திய அரங்கேற்றங்களுக்கு விமர்சனங்களை தமிழில் எழுதியும் இருக்கின்றார்.

சிறுவயதில் என் வாசிப்பு ஆர்வத்தைப் பார்த்து அம்புலிமாமா கதைகள் வெறும் கற்பனைக் கதைகள் தான் அதனைவிட கோகுலத்தில் நல்ல கதைகள், கட்டுரைகள் வருகின்றது எனக் கூறி எனக்கு ஒவ்வொருமாதமும் கோகுலம் இதழ் அனுப்புகின்றவர். பின்னர் நான் சுஜாதா, ராஜேஸ்குமார் போன்ற எழுத்தாளர்களில் ஆர்வம் காட்டியபோது அவர்களினது கதைகளை விட ஜெயகாந்தன், அகிலன் போன்றவர்களது கதைகளை வாசிக்கவும் கற்றுக்கொடுத்தார். இன்றைக்கும் அவரிடம் ஜெயகாந்தனின் அனைத்து புத்தகங்களும் உண்டு. அதே நேரம் தமிழில் வாசிப்பதை குறைத்து ஆங்கிலத்தில் வெளிவந்த நல்ல பல புத்தகங்களை வாசிக்கச் சொல்லி அவர் என்னை கேட்டுக்கொண்டும் ஏனோ நான் அதில் பெரிதாக அக்கறை காட்டவில்லை. காலத்துக்கேற்ப தொழில்நுட்பங்கள் மாறினாலும் அச்சுவடிவில் இருக்கும் புத்தகங்களை வாசிப்பது போன்ற இன்பம் கணினியிலோ அல்லது Tab, mobile போன்றவற்றில் இல்லை என அடிக்கடி சொல்லுவார்.

அவரின் இசை ரசனையும் என்னை அடிக்கடி வியக்க வைக்கும். கர்நாடக சங்கீதத்தை ரசிக்கும் அதே நேரத்தில் திரையிசைப் பாடல்கள், மேற்கத்திய இசை எனப் பலதையும் ரசிப்பார். திரையிசைப்பாடல்களில் எந்த ராகம் பயன்படுத்தப்பட்டிருக்கிறது என கண்டுபிடிப்பதுடன் அதில் ஏதாவது சந்தேகம் இருந்தால் அமரர்.எஸ்.கே.பரராஜசிங்கம் அவர்களிடம் கேட்டு அதனை நிவர்த்திசெய்துவிடுவார். திரையிசைப் பாடகனாக தெரிந்த பாடகர் ஹரிகரன் அவர்களின் "கொலோனியல் கசின்ஸ்" (Colonial Cousins) அல்பத்தை எனக்கு அறிமுகப்படுத்தியவர் அப்பாதான். அதுமட்டுமல்லாமல் தன்னுடைய இளமைப்பருவத்தில் பிரபலமாக இருந்த Boneym என்ற மேற்கத்திய இசைக்குழுவையும் அவர்களின் பாடல்களையும் எனக்கு அறிமுகப்படுத்தினார். அவரிடம் கர்நாடக சங்கீத கசட்டுகள் மட்டுமல்லாமல் புதிதாக வெளிவரும் திரையிசைப் பாடல் கசட்டுகளும் பல இருந்தன. வெள்ளவத்தை பைனாஸ், டாம் வீதியில் ஒரு மியூசிக் சென்டர் போன்றவற்றில் தனக்கு பிடித்த பாடல்களை ஒலி நாடாக்களில் (Cassettes) பதிவு செய்து கொள்ளும் பழக்கம் அவற்றின்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

பயன்பாடு அற்றுப்போகும் வரை அவரிடம் இருந்தது.

இசையோடு மட்டுமல்லாமல் அவர் சிறந்ததொரு திரைப்பட ரசிகருமாவார். ஆரம்பகாலத்தில் அவர் சில நாடகங்களுக்கு கதை எழுதி இயக்கியதும் நடித்ததும் அவரின் திரைப்பட ரசனைக்கு மூலகாரணமாகும். நான் ராணி கொமிக்ஸில் ஜேம்ஸ்பாண்ட் கதைகளை வாசித்ததைப் பார்த்து எனக்கு ஜேம்ஸ்பாண்ட் (James Bond) திரைப்படங்களை அறிமுகப்படுத்தியவர் அப்பா. அத்துடன் Hollywood நடிகர்களான Sean connery, Clint Eastwood, Lee Van Cleef ஆகியோரின் தீவிர ரசிகன். Dr. No, From Russia with Love, Gold finger, My Fair lady, For few more dollars, Benhur போன்றவை அவருடைய விருப்பத்திற்குரிய படங்களாகும். இதுமட்டுமல்லாமல் இரண்டாம் உலகப்போரை மையமாக வைத்து இலங்கை கித்துல்கலவில் படப்பிடிப்பு நடத்தப்பட்ட த பிரிட்ச் ஆன் த ரிவர் குவாய் (Bridge on the river Kwai) அவரின் மிகவும் விருப்பத்துக்குரிய திரைப்படமாகும்.

விளையாட்டைப் பொறுத்தவரை அப்பா கிரிக்கெட்டில் அதிக ஆர்வம் காட்டியவர். அவரின் எந்தக்காலத்துக்கும் விருப்பத்துக்குரிய வீரர்களாக சேர் ஹறி சோபர்ஸ், சேர் விவியன் ரிச்சர்ட்ஸ், கிளைவ் லொயிட்ஸ், ரொஹான் கனாய் போன்ற மேற்கிந்திய தீவுகளின் வீரர்களைக் குறிப்பிடுவார்.

என் நண்பர்கள் பலருடனும் அப்பா நட்பாக இருந்திருக்கின்றார். என் நண்பர்கள் என்னைச் சந்திக்கவந்தாலும் அப்பாவுடனும் சில நிமிடங்கள் உரையாடிவிட்டுத் தான் செல்வார்கள். அவரின் இறப்புச் செய்தி கேட்டு என்னுடன் தொலைபேசியில் பேசிய நண்பர்கள் அவருடன் தமக்கு இருந்த நட்பை சிலாகித்து சொன்னார்கள்.

நாம் பிறக்கும் போதே இறக்கும் திகதியும் எமக்கு எழுதப்பட்டுவிட்டது இந்த இடைப்பட்ட காலத்தில் எம் வாழ்க்கை மற்றவர்களுக்கு ஒரு பாடமாக அமைய வாழ்வது எம் கையில் தான் இருக்கின்றது. அந்தவகையில் எங்கள் அப்பாவின் இழப்பு ஈடுசெய்யமுடியாததாக இருந்தாலும் இதுதான் இயற்கை என்பதை உணர்ந்து அவரின் நினைவுகளுடன் வாழ்வதே நாம் அவருக்கு செய்யும் நன்றியும் அஞ்சலியும் ஆகும்.

Time is the healer
Time moves on
Time don't wait for anyone
You tell you'll be back
But that will take some time.

மகன்

**பேரின்பநாயகம் மயூரன்**



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# சமூக மாற்றத்திற்காக அரும்பாடுபட்ட குடும்பத்தைச் சேர்ந்தவரே சட்டத்தரணி பேரின்பநாயகம்

வதிரி என்ற கிராமத்தைச் சமூகத்தின் முன்பாக அடையாளப்படுத்துவதற்காக எமது முன்னோர்கள் எவ்வாறெல்லாம் அரும்பாடுபட்டு வந்திருப்பார்கள் என்பதை மீட்டுப்பார்க்கிறபோது இவ்வளவையும் இவர்களா செய்தார்கள் என நினைக்கத் தோன்றும்.

19ஆம் நூற்றாண்டில் உலகில் பல மாற்றங்கள் நிகழ்ந்துள்ளன. இது வரலாறு காட்டும் உண்மை எனலாம். ஒரு புள்ளியாக எங்கோ ஒரு மூலையில் எந்த விதமான அரசியல் பின்னணியும் இல்லாமல் கல்வியாலும், பொருளாதாரத்தினாலும் ஒரே நோக்கமாகக் கொண்டு ஒருமித்து ஒரே குடையின் கீழ் நின்றே வதிரியைக் கண்டார்கள்.

மனித உரிமைகள் மறுக்கப்பட்ட இந்த மக்கள் தமது தொழில் மூலமாக ஆன்மீகத்தை வளர்க்க ஒரு கோயிலும், அறிவைப் பெருக்க அறிவுக்கூடமான தேவரையாளி இந்துக் கல்லூரியையும், வாசிப்பை வளர்த்தெடுக்க வட்டுவத்தை சனசமூக நிலையத்தையும், உடல் ஆரோக்கியத்திற்கு டயமன்ஸ் விளையாட்டுக் கழகத்தையும் உருவாக்கினார்கள்.

இத்தகைய உருவாக்கத்திற்கு மத்தியில் பல குடும்பங்களின் உழைப்பு இருந்தது. அதில் ஒரு குடும்பம் ஐந்து தலைமுறைகளாக சமூகப் பணிக்காகத் தங்களை அர்ப்பணித்த குடும்பத்தைப் பற்றி என்னால் சொல்லமுடியும். 18ஆம் நூற்றாணடின் காலப்பகுதியில் வைத்தியர்களும் சோதிடர்களுமே கல்வியை வளர்க்க முற்பட்டார்கள். பாடசாலைகள் இல்லாத காலப் பகுதியில் சைவசமயம்மதான் எமது மக்களை நெறிப்படுத்தும் என நினைத்தவர்கள் சாத்திரியப்பா என அழைக்கப்படும் கதிரன் என்பவர் மகனான வேலுச் சட்டம்பியாவர். இவரே திண்ணைப் பள்ளிக்கூடம் நடாத்தியவராவார். இவர் பிள்ளைகளான வைத்தியர் க.வே.சின்னப்பிள்ளையும் பரியாரி க.வே. ஆழ்வானும் ஆவார்கள்.

இத்தகைய கல்விப் பாரம்பரியமுள்ள குடும்பத்தில் ஆ.ம.செல்வத்துரை மீனாட்சியம்மா தம்பதிகளின் மூத்த மகனாகப் பிறந்தவர்தான் அமரர். பேரின்பநாயகம். இளைய மகனாகப் பிறந்தவர் செ.சபாநாயகம். தனது மூத்த மகன் பிறந்த வேளையில் அவருக்கு என்ன பெயர் வைக்கலாமென யோசித்தபோது அவரது நினைவுக்கு வந்தவர் 1920இல் கல்வியாளனும், சிந்தனையாளரும், உரிமைகள் மறுக்கப்பட்ட மக்களின் உரிமைக்காகப் பாடுபட்ட எஸ்.எச்.ஹன்டி பேரின்பநாயகம் நினைவுக்கு வரவே தனது மகனுக்கு பேரின்பநாயகம் என்ற பெயர் வைத்தார். இவர் பெற்றோர் ஆசிரியர்களாகக் கடமையாற்றியவர்கள். தந்தையார் ஆ.ம.செ. யிடம் சமூக உரிமைக்காகவும், வருங்காலத்தில் நம்மவர்கள் கல்வி ஊடாகப் பல துறைகளிலும் போட்டியிட்டு முன்னேற வேண்டும் என்ற எண்ணம் இருந்தது. இவரது பல போராட்டங்கள் பற்றி நான் வேறு ஒரு சந்தர்ப்பத்தில் தெரிவிப்பேன். இவரது அயராத சமூக உழைப்பைப்பற்றி அமரர் அதிபர் எம்.எஸ்.சீனித்தம்பி அவர்கள் பாராட்டியதையும் நான் கேள்விப்பட்டிருக்கிறேன்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

அமரர். செ.பேரின்பநாயகம் அவர்களின் பேரன் (தாய் வழியில் மட்டுமல்ல தந்தை வழியிலும் பேரன்) சி.க.ஆறுமுகம் குருநாகல் வர்த்தகர். தேவரையாளி இந்துக் கல்லூரி ஆரம்ப கர்த்தாக்களில் இவரும் ஒருவர். இவர் மாணவர்களுக்கு பென்சில், கொப்பி, புத்தகங்கள் வாங்கிக் கொடுத்த ஒருவர். அமரர் அவர்களின் மாமனார் அமரர் சி.மாசிலாமணி ஒரு வைத்தியர். அமரர் தர்மகுலசிங்கம் (ஜெயம்) அவரின் அரசியல் கொள்கையில் பிடிப்போடு வாழ்ந்தவர். இவரின் தந்தையார் வைத்தியர் சிலம்பு சமூகத்திற்காக உழைத்தவர். இந்தக் குடும்பத்தின் உறுப்பினர்கள் சமூகத்திற்காக அர்ப்பணிப்போடு வாழ்ந்தவர்கள்.

ஏன் இவர்களது குடும்பப் பின்னணியை எழுத முற்பட்டேன் என்றால் இந்தியாவின் சுதந்திரத்துக்காகவும் நாட்டுக்காகவும் இன்று வரை பாடுபடும் குடும்பமான பண்டித ஜவகர்லால் நேருவின் குடும்பம், என்னை இவர்களைப் பற்றி ஆராய வைத்தது.

அமரர். செ.பேரின்பநாயகத்தை அவரோடு நெருக்கமாகப் பழகுவோர் "பெரி" என அழைப்பர். இவர் அமரர் வைத்தியர் சி.மாசிலாமணி மகேஸ்வரி தம்பதிகளின் மூத்த மகளான சந்திரலேகாவைத் திருமணம் செய்தார். அதன் பேறாக மீரா, மதுரா, மயூரன் என்ற பிள்ளைகளைப் பெற்றெடுத்தார். இவர் ஒரு கலைஞன். இவரது நாடகங்கள் அந்த நாட்களில் வைரவர் கோயிலில் மேடையேற்றப்படுவதுண்டு. சங்கீதத்தில் அதீத ஆர்வம் கொண்டவர். தான் சுவைத்த ரசித்த பாடல்களைப் பற்றி மற்றவர்களும் தேடிச் சுவைப்பதற்கு உதவுவார்.

இவரது தந்தையார் சமூகத்திற்காகப் பாடுபட்டுக் கொண்டிருந்த காலத்தில் சட்டத்தரணியின் அவசியத்தை உணர்ந்த காரணத்தினால் தனது மகனைச் சட்டத்தரணியாகப் படிக்க வைத்து அழகு பார்த்தார்.

அமரர் அவர்கள் சட்டத்தரணியாகப் பருத்தித்துறை, சாவகச்சேரி, கொழும்பு ஆகிய இடங்களில் பணியாற்றியவர். கொழும்பில்தான் அதிக காலம் பணியாற்றினார். இவர் ஒரு காலத்தில் விடுதலை வீரர்களான குட்டிமணி, தங்கத்துரை ஜெகன் ஆகியோருக்காக இ.ஸ்ரீனிவாசன், S.J.V.C.சந்திரஹாசன் C.V.விவேகானந்தன் சட்டத்தரணிகளுடன் சேர்ந்து நீதிக்கு வாதாடியவர். சமூகம் சார்ந்த விடயங்களிலும் இவரது பங்களிப்பு இருந்தது. சிறந்த வாசகனையும் சிறந்த கலைஞனையும் சிறந்த சட்டத்தரணியையும் இன்று இழந்து விட்டோம். தந்தை செல்வா அறக்கட்டளை அஞ்சலி செலுத்தி நிற்கிறது.

இவரது சொந்த மாமியின் மகன் மா.மகேஸ்வரன், ஏ.ரவிவர்மா, சாகித்திய விருது கிடைத்த மகள் திருமதி.மீரா மங்களேஸ்வரன் திருமதி.மதுரா முரளிபாரதி, மகன் பே.மயூரன் இன்னும் சிலர் சேர்ந்து 'அட்சரம்' என்னும் நிறுவனத்தை உருவாக்கி, சமூகப்பணி, சமூகத்தின் பணி, எமது குடும்பத்தின் பணி என நினைத்து எமது ஊரில் அமரரது மூத்த மருமகன் ஈ.மங்களேஸ்வரன் தலைமையில் அர்ப்பணிப்போடு செய்து வருகின்றனர். சமூகத்திற்காகத் தம்மை அர்ப்பணித்த குடும்பத்தின் பங்களிப்பு இன்னும் தொடருவதன் மூலம் அன்னாரின் ஆத்மா சாந்தியடைக.

அன்பன்

**ஆர். பி.**



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# என்றும் எங்கள் பெரியப்பா.....

என்றும் எங்கள் பெரியப்பா......
சின்ன வயது நினைவுகளில்
வண்ணமுற எந்தன் ஆசைகளை
நிறைவேற்றும் பெரியப்பா நீங்கள்
நினைவு தெரிந்த நாள்முதலாய்
வாய்முழுதும் நானழைக்கும் சொல்
"பெரி"
வர்ணச் சட்டைகளும் அதற்கேற்ப
சப்பாத்து முதலாய்
அனைத்தையும் கேட்காமலே
வாங்கித்தரும் உங்கள்
எண்ணுக்கணக்கற்ற பிரியத்தை
எப்படி மறக்க.....
கொழும்பு வாழ்வில் எத்தனை
சந்தோஷங்கள் கண்டோம் பெரி
பெரியுடன் நகைத்துப் பேசுவது
செல்லமாய்க் கோபிப்பது
அடுத்த கணமே பெரி என்று
ஓடுவதும்
நீங்கள் என்னை அரவணைப்பதும்
கண்முன்னே.....
வந்து செல்கையில் நெஞ்சம்
கனக்கிறது......

என் ஒவ்வொரு நகர்வுகளிலும்
பெருமையுறு புளகாங்கிதத்தை
உங்களில் நான் கண்டேன்
நான் தேர்ந்தெடுத்த துறையில்
அலாதி பிரியம் கொண்டவர்
நீங்கள்.....
"சுண்டு" "சுண்டு" என்று
உங்கள் நாவினிக்கக் கூப்பிடும்
அந்த அன்புமிகு வார்த்தையை
இனி எங்கு கேட்பேன்......
சட்டத்தரணியாய் தலைநகரில்
உங்கள் பணி அநேகம்
இன்று நீங்களில்லா இன்பவனம்
செல்ல மனமெல்லாம் கனம்
இறுதி நாட்களில் நீங்கள்
பேசாதிருப்பினும் உங்கள்
பார்வை ஆயிரம் கதை பேசும்...

பூவற்கரையான் பாதத்தில்
நிம்மதியாய் உறங்குங்கள்

பேரன்போடு உங்கள் மகள்.....
**ர.தாட்ஷாயணி**



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# என் நண்பர் செல்வத்துரை பேரின்பநாயகம்

நாம் வாழ்க்கையில் பலரை நாம் சந்திக்கிறோம். அவர்கள் பல வழிகளிலும் பல துறைகளைச் சார்ந்தவர்களாக இருப்பார்கள். அவர்களில் பலர் நம் வாழ்க்கையைக் கடந்து போய் விடுவார்கள். பிறகு அவர்கள் நம் ஞாபகத்திலிருந்து தூரம் போய் விடுவார்கள். அப்படி தூரம் போவதற்கான காரணம் எம் வாழ்வில் எந்தவொரு பங்களிப்பைச் செய்யாதவர்களாகவோ, தாக்கத்தினை ஏற்படுத்தாதவர்களாகவோ எம் வாழ்க்கையைக் கடந்து போனவர்களாக இருப்பார்கள். ஆனால் நம் வாழ்க்கையைக் கடப்பவர்களில் பலர் பெரும் தாக்கத்தையும் ஏற்படுத்தியும் பங்களிப்பையும் செய்தவர்களாக இருப்பார்கள்.

என்னைப் பொறுத்தவரை நான் ஈடுபட்ட வர்த்தகத் துறை வழியாகவோ,சந்தித்த நண்பர்களும்சரி சரி, குடும்ப உறவின் காரணமாக நண்பர்களாக மாறியவர்களும் சரி, தனிப்பட்ட முறையிலான நேசங்களாக வந்து சேர்ந்த நண்பர்களும் சரி, ஏதோ விதத்தில் தாக்கத்தையும் உதவியையும் ஏற்படுத்தியவர்களாகவும் செய்தவர்களாகவும் இருந்து வந்துள்ளார்கள்.

அதைப் போல் என் கலை இலக்கியப் பயணத்தில் சந்தித்த நண்பர்களில் என் கலை இலக்கிய வளர்ச்சிக்கு உதவியவர்கள் அந்த ஒளிப்பயணத்தில் சந்தித்த நண்பர்களில் குறிப்பிடதக்கவர்கள். அந்த வகையில் டொமினிக் ஜீவா அவர்கள் எனக்கு அறிமுகப்படுத்திய இலங்கை முற்போக்கு எழுத்தாளர்கள் சங்கத்தின் வழியாக எனக்கு அறிமுகமான, என் கலை இலக்கிய வளர்ச்சிக்குத் துணை புரிந்த நண்பர் ராஜ ஸ்ரீகாந்தன் அவரை நினைவு கூர்ந்து, அவராலும், வதிரி சி. ரவீந்திரன் அவர்களாலும் எனக்கு அறிமுகமானவர்தான் நாம் இன்று இங்கு நினைவு கூரும் என் மீது பெரும் மதிப்புக் கொண்ட செல்லத்துரை பேரின்பநாயகம் அவர்கள்.

அவர் ராஜ ஸ்ரீகாந்தன் மற்றும் ரவியாலும் வெறும் ஒரு பிரமுகராகவோ சட்டத்தரணியாகவோ அறிமுகப்படுத்தப் படவில்லை.மாறாக பேரின்பநாயகம் அவர்களின் குடும்பத்தின் ஓர் அங்கத்தவனாக அவர்கள் ஏற்றுக் கொள்ளும் வண்ணம் அவர்கள் அறிமுகப்படுத்தினார்கள். நண்பர் ராஜஸ்ரீகாந்தன் என் வீட்டுப் பெயரான பாபு என்று சொல்லி அழைப்பார். அதே பெயரைச் சொல்லிப் பேரின்பநாயகம் அவர்கள் என்னைச் சில வேளைகளில் அழைப்பதுண்டு.

அன்று தொடக்கம் என் கலை இலக்கியப் பங்களிப்புகளை அவதானித்து வந்துள்ளார்.அவர் மட்டுமல்ல



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

அவரது குடும்பத்தினரும் (குறிப்பாக அவரது மகன் மயூரன் போன்றவர்கள்) எனது கலை இலக்கியப் பங்களிப்புகளை அவதானித்து வந்துள்ளார்கள்.

பேரின்பநாயகம் அவர்கள் எல்லாக் கலை இலக்கியக் கூட்டங்களுக்குச் செல்வதில்லைதான் ஆனால் டொமினிக் ஜீவா, ராஜ ஸ்ரீகாந்தன் ரவீந்திரன் நான் போன்றோர் சம்பந்தப்படும் இலக்கியக் கூட்டங்களுக்கு வந்து விடுவார். அவற்றில் எங்களின் பங்களிப்பைப் பார்த்துக் கூட்ட முடிவில் தனது கருத்துக்களைச் சொல்லிச் செல்வார். பொதுவாகக் கம்பன் கழக விழாக்களில் தவறாது கலந்து கொள்வார். அப்படி நடக்கும் விழாக்களில் நடக்கும் கவியரங்குகளில் நான் கலந்து கொண்ட கவியரங்குக்கு அவர் தவறாது வந்துள்ளார். அப்படி அவர் அந்தக் கவியரங்குகளில் நான் வாசித்த கவிதைகளை மிகப் பாராட்டிப் பேசிப் போவார்.

பேரின்பநாயகம் அவர்கள் மல்லிகையின் சிறந்த வாசகராகத் திகழ்ந்தவர். மல்லிகையில் தொடர்ந்து எழுதி வந்த படைப்புகளை ஆழமாக வாசித்து வந்தவராக இருந்தார். சந்திக்கும் பொழுதெல்லாம் அப்படைப்புகளைப் பற்றிய கருத்துகளை விமர்சனப்பூர்வமாகச் சொல்லுவார். அக்கருத்துகள் என்னை ரொம்பவும் ஊக்குவிக்கும் வகையில் அமைந்தன. அவர் ஒரு சட்டத்தரணியாகப் பணியாற்றியவர் சமூக அரசியல் செயற்பாட்டாளராகவும் செயற்பட்டவர். எனது வர்த்தகத் துறை சம்பந்தமான சட்டப் பிரச்சினைகளைப் பற்றிச் சில ஆலோசனைகளைக் கேட்டு இருக்கிறேன். அபூர்வமாக அரசியலைப் பேசி இருப்பேன். மற்றபடி அவரது இல்லம் செல்லும் தருணங்கள் பொழுதெல்லாம் கலை இலக்கியத்தைப் பற்றிய உரையாடி இருக்கிறோம். அந்த உரையாடல் மூலம் அவர் சிறந்த வாசகர் என்பதை எனக்கு எடுத்துக் காட்டியது. ராஜ ஸ்ரீகாந்தன் எனது நேசத்தையும் அவரது இழப்பு எனக்கு ஏற்படுத்திய தாக்கத்தையும் அமரரது இல்லத்தில் நடந்த ராஜ ஸ்ரீகாந்தனின் இறுதிச் சடங்கின் பொழுது உணர்ந்து கொண்டவர். பேரின்பநாயகம் அவர்களின் குடும்பத்தின் இழப்புகளான ராஜ ஸ்ரீகாந்தனின் மறைவு அவரது மகளான அபர்ணாவின் மறைவு, பேரின்பநாயகம் அவர்களின் மறைவு மூன்றுமே எனது குடும்ப உறவினரின் மறைவுகளாகவே நான் உணர்கிறேன்.

நாட்டின் நிலைமை காரணமாகப் பேரின்பநாயகம் அவர்களது இறுதிச்சடங்கில் கலந்து கொள்ள முடியாமல் போனது எனக்கு மிகுந்த மனக் கிலேசத்தை ஏற்படுத்தியது. அவரது பூதவுடல் மறைந்தாலும் அவரது நினைவுகள் என்றும் என்னில் நிலைத்து இருக்கும்.

**மேமன்கவி**



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org


## திருவெண்பாதியான்.....

அமரர் M.S.பேரின்பநாயகம் வதிரி திருவெண்பாதியில் அமரர்களான செல்வத்துரை மீனாட்சியம்மா தம்பதிகளிற்கு மூத்த மகனாக 1937.03.28 இல் பிறந்தார். அக்காலத்தில் உறவுகள் கூட்டுக் குடும்பமாக வாழ்வது வழக்கம். அந்த வகையில் திருவெண்பாதியில் செல்வத்துரை மீனாட்சியம்மா, கந்தப்பு பரமேஸ்வரி, வேலுப்பிள்ளை அம்மாப்பிள்ளை, தினகரம்பிள்ளை நாகமுத்து, கோவிந்தசாமி வள்ளிப்பிள்ளை, கணபதிப்பிள்ளை கதிராசி ஆகிய குடும்பங்கள் மிகவும் ஒற்றுமையாக வாழ்ந்து தமது வாரிசுகளையும் மிகுந்த அன்புடனும் ஒற்றுமையுடனும் வாழ வழிகாட்டியாக இருந்தார்கள். திருவெண்பாதி உறவுகள் அமரரை "மூத்தண்ணா" என அன்புடன் அழைப்பார்கள். அவரும் எல்லோரும் தனக்கு இளையோராக இருப்பதையொட்டி பாசமாக வழிநடத்தினார். அமரர் சிறு பராயத்தில் மிகவும் சுட்டித்தனமும், குழப்படியுமாக இருப்பார். அமரரும் அவரது மாமனார் S.K.இராஜேந்திரன் அவர்களும் சிறுவயதிலேயே தமது கல்வியை யாழ்ப்பாண பிரபல பாடசாலைகளில் விடுதியில் ஒன்றாகத் தங்கி கற்று மேன்நிலையை அடைந்தார்கள். மாமனார் அமரரின் சுட்டித்தனம், குழப்படிகளைக் கண்டிப்பது வழிநடாத்துவதாக இன்றும் செல்லுவார். அமரரின் பெற்றோர் குண்ணந் தோட்டத்தில் சிறு வீடு அமைத்து குடிபுகுந்தார்கள். இருந்தபொழுதிலும் பிறந்த இடத்தை மறவாது தாமும் தமது பிள்ளைகளான பேரின்பநாயகம், சபாநாயகம் ஆகியவரையும் திருவெண்பாதி உறவுகளுடன் ஒருங்கிணைத்தார்கள். அமரர் தனது உயர்கல்வியை சட்டக்கல்லூரியில் இணைந்து கற்று எமது கிராமத்தின் முதலாவது சட்டத்தரணியாக இருப்பது திருவெண்பாதிக்குப் பெருமைமிக்கது. தாயார் முதுமையிலும் தினந்தோறும் பின்னேர வேளையில் சிறுவர்களுக்குத் தின்பண்டங்களுடன் திருணெ்பாதிக்கு வருவார். பிள்ளைகள் அவரிடம் "மூத்தாச்சி" என ஓடுவார்கள். அவ்வாறே அமரரும் நோய் வாய்ப்படும் வரை தனது சோதரி அழகேஸ்வரி வீட்டிற்கும், மாமனார் S.K.இராஜேந்திரன் வீட்டிற்கும் வந்து தனது மாலைப்பொழுதைக் களிப்பார். கடந்த வருடம் சகோதரி அழகேஸ்வரியின் திடீர் மறைவுச் செய்தியை அறிந்து வந்து கதறி அழுதார். அமரரை ஏனைய திருவெண்பாதி உறவுகள் அத்தான், பெரியமாமா, பெரியப்பா என அன்போடு அழைத்து நெருங்கிப் பழகுவார். அவரது பிள்ளைகளும் உறவு விட்டுப்போகாது உறவாடுவார்கள். அன்னாரது இழப்பு எமக்குப் பெரிதாக இருப்பதோடு அன்னாரின் ஆத்மா சாந்தியடைய இறைவனை வேண்டி நிற்கினறோம்.

உறவுகள்
**திருவெண்பாதி**
வதிரி.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org









Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org







இலங்கை சட்டத்தரணிகள் சங்கமும், கொழும்பு சட்ட சமூகமும் இணைந்து Elphinstone அரங்கில் நடாத்தப்பட்ட நீதிரங்கா 97 கலைவிழாவின் போது.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org



இலங்கை சட்டக்கல்லூரி இந்து மாணவர் சங்கத்தில் செயலளாராக அமரர் பேரின்பநாயகம் தலைவராக முன்னாள் அமைச்சர் டி.எம்.சுவாமிநாதன் மற்றும் ஏனைய உறுப்பினர்கள்.







Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org



# நன்றி நவிலல்

எங்கள் குடும்பத் தலைவர் **அமரர் செல்வத்துரை பேரின்பநாயகம்** அவர்களின் மரணச்செய்தி கேட்டு எம்முடன் இணைந்து துயர் பகிர்ந்த உற்றார், உறவினர், நண்பர்களுக்கும், தொலைபேசி, குறுஞ்செய்தி சமூகவலைத்தளம் ஆகியவற்றின் மூலம் ஆறுதலளித்தவர்களுக்கும், மலர்வளையம், பிரசுரம் ஆகியவற்றின் மூலம் அஞ்சலி செலுத்தியவர்களுக்கும், இறுதிக் கிரியையின்போது அஞ்சலி உரை நிகழ்த்தியவர்களுக்கும், அன்னார் நோயுற்ற சில நாட்கள் சிகிச்சையளித்த வைத்திய கலாநிதி க.வேலும்மயிலும் அவர்கட்கும் அன்னாரின் திருவுருவப் படத்தினை அட்டைப் படமாகத் தன் கைவண்ணத்தில் தீட்டித்தந்த தென்னிந்திய பிரபல ஓவியர் திரு. டிராஸ்கி மருது அவர்கட்கும், ஆத்ம சாந்திப் பிரார்த்தனை நிகழ்த்தியவர்களுக்கும், இன்றைய நிகழ்வில் கலந்துகொண்டோருக்கும் இம்மலரை அச்சிட்டுத்தந்த பதிப்பகத்திற்கும் எமது நன்றியைத் தெரிவித்துக்கொள்கின்றோம்.

**- குடும்பத்தினர் -**



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org



# பேரின்பம்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org